நீ என் நித்தியா...!

18+

மன் மதன்

நீ என் நித்தியா

மன் மதன்

Contents

(1)
(2)
(3)
(4)
(5)
(6)
(7)
(8)
(9)
(10)
(11)
(12)
(13)
(14)
(15)
(16)
(17)
(18)
(19)
(20)

(1)

ஏற்காடு

அந்தப் பெரிய காப்பி எஸ்டேட்டின் வரவு செலவு கணக்குகளைப் பார்த்துக் கொண்டு இருந்தான் விமலநாதன்.

ஆறடி உயரம். பெண்கள் ரசிக்கும் ஜிம் பாடி. சேதுவில், ஆரம்பத்தில் வந்த விக்ரம் போல படு கம்பீரமாக இருந்தான். வசதிக்கு குறைவில்லை. வயது முப்பத்திநாலு. ஆனாலும் இருபத்தெட்டுக்கு மேல் அவனோட வயசை மதிப்பிட முடியாது. அந்தளவு கம்பீரமாக நேர்த்தியாக இருந்தான்.

அப்பா சின்ன வயசிலயே இறந்துட்டார். தாய் மட்டும்தான். இவனைப் படிப்பித்தது, அவனுடைய தாய்மாமன் தணிகாசலம். அதனால் இன்று வரை அவர் மீது அளவிட முடியாத மதிப்பும் மரியாதையும் வைத்திருக்கிறான்.

அவன் ஆரம்பத்தில் ஐ.டி துரையில் வேலை பார்த்திருந்தான். கை நிறைய சம்பளம். இருபத்தைந்தில் திருமணம். லவ் மரேஜ்தான். ஒன்னா வேலை பார்த்த பொண்ணு. தூரத்து சொந்தம். அதனால் எந்த சிக்கலும் இல்லாமல் அவர்களின் திருமணம் நடந்தேறியது. அந்தத் திருமணத்தை செஞ்சு வச்சதே மாமாதான். திருமணம் முடிச்சு மூன்று வருஷத்தில், திடீர் என்று அவன் மனைவி சரிதா ரத்தமாக வாந்தி எடுக்க, மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றார்கள். ரத்தப் புற்று நோய் என்றார்கள். நிறைய செலவு செய்தும் பிழைக்க வைக்க முடியல. திருமணமாகி நாலு வருஷத்தில் அவனுடைய வாழ்க்கை முடிந்து போனது.

சரிதா இறந்து ஒரு வருஷம் கூட ஆகல, தாய் அன்னபூரணி இவனை மறுமணம் செய்யச் சொல்லி நச்சரிக்க மறுத்துவிட்டான். அவனால் சரிதாவை விடுத்து இன்னொருத்தியை ஏத்துக்க முடியல.

எந்த அம்மாதான் மறுத்ததும் சரி சாமின்னு விட்டிருக்காங்க? தன்னோட மகனோட வாழ்க்கை பட்டுப் போயிடுமோ என்கிற அச்சம். இடை விடாமல் நச்சரிக்க

வைத்தது.

பொறுத்துப் பார்த்தான். ஒரு கட்டத்திற்கு மேல் முடியாமல் போக, சம்பாதிச்ச பணத்தை எல்லாம் சேத்து ஏற்காடில் இந்த காப்பி எஸ்டேட்டை வாங்கிக்கொண்டு தனியாக வந்துவிட்டான்.

சும்மா சொல்லக் கூடாது. அவனுடைய கடும் முயற்சி கைமேல் பலனாக அள்ளிக் கொட்டியது.

அங்கிருந்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து கணிசமான தொகையைச் சம்பாதித்து மேலும் பல எஸ்டேட்டுகளை வாங்கி அதற்கு சொந்தக்காரனும் ஆகிவிட்டான்.

இதோ மனைவி செத்து அஞ்சு வருஷம் ஆயிடுச்சு. வேறு திருமணம் செய்யப் பிடிக்காமல், தனியாக வாழ்கிறான். அவனுக்கு அந்தத் தனிமை பிடித்திருந்தது. அதற்காக அவன் ஆசையைத் துறந்தவன்லாம் சொல்லிட முடியாது. அப்பப்போ பெண் ஆசை வருவதும் உண்டு. ஆனால் சரிதாவை விடுத்து இன்னொருத்தி கிட்ட போகப் பிடிக்கல. ஆசையை அடக்கிகிட்டான்.

அன்னபூரணியும் அவன் கிட்ட கேட்டு சலித்து இப்போ கேட்கிறதையே விட்டுவிட்டாள்.

மேசையில் இருந்து கணக்கு வழக்குகளை பார்த்துக் கொண்டு இருந்தவனின் செல் அடிக்க எடுத்துப் பார்த்தான். தாய் அன்னபூரணிதான் அழைத்திருந்தாள்.

அம்மா ஏன் இப்போ கூப்பிடுறாங்க?' யோசனையோடு செல்லை எடுத்துக் காதில் வைக்க,

"தம்பி விமலு..." என்று மறு பக்கம் தாய் மூக்கைச் சிந்த பதறிப்போனான் விமலநாதன்.

"மா... என்னம்மா ஆச்சு... மாமாக்கு ஒன்னுமில்லையே?"

"மாமாக்கு ஒன்னுமில்லைடா... ஆனா நம்ம நித்தியாவுக்குத்தான்..." மேலும் அவர் அழுகையோடு மூக்கைச் சிந்த இவனுக்கு எரிச்சல் வந்தது.

நித்தியா. அவனோட மாமன் பொண்ணு. அவனை விட பதினஞ்சு வயசு சிறியவள். அவனுக்கு நித்திலா என்றால் ரொம்ப பிடிக்கும். அவள் குழந்தையாக இருக்கும்போதே கைகளில் தூக்கி விளையாடி இருக்கிறான். பள்ளிக்கு கூட்டிச் சென்றிருக்கிறான். அவள் ஆசைப்பட்டு எது கேட்டாலும் கொஞ்சம் கூடத் தயங்காமல் வாங்கிக் கொடுத்துவிடுவான். எப்போதும் அவன் முதுகில் உப்பு முட்டையாகத் தொங்குவாள்.

இவன் திருமணம் முடித்த பிறகு அவனுக்கும் அவளுக்கும் இடையில் இருந்த நெருக்கம் கொஞ்சம் குறைந்துதான் போனது. வேலை, மனைவியின் பிரச்சனை என்று அதற்குப் பிறகு அவளைக் கவனிக்க அவனுக்கு நேரம் கிடைக்கவில்லை. அதுவும் கடந்த ஐந்து வருடங்களா சுத்தமாக முடியல.

ஏற்காடு வந்த பிறகு, ஊருக்கு ஒரு சில வாட்டி சென்றிருந்தான். ஆனால் அவளை சந்திக்கும் வகையில் சூழ்நிலை அமையவில்லை.

ஒரு முறை சென்ற போது, அவள் டூர் என்று சென்றிருந்தாள். இரண்டாம் முறை சென்ற போது, யாருடையதோ திருமணத்திற்குப் போயிருந்தாள். இன்னொரு வாட்டி சென்றபோது நல்ல காய்ச்சலில் படுத்திருந்தாள். பிறகு அவள் காலேஜ் என்று ஹாஸ்டலில் தங்கிப் படிக்கப் போய்விட்டாள்.

அப்படியே அவளைப் பார்த்து ஐந்து வருஷங்கள் ஆகிடுச்சு.

இப்போது நித்தியாவுக்கு என்ன ஆச்சு? குழம்பியவன்,

“அம்மா... எதுவா இருந்தாலும் அழாமத் தெளிவா சொல்லு. நித்திக்கு என்ன?” கொஞ்சம் கோபமாகக் கேட்டான்.

“டேய்... இது எல்லாம் ஃபோன்ல சொல்ற விஷயமில்ல... நீ நேரா வீட்டுக்கு வாடா...”

“அம்மா.. புரியாம பேசாதேமா... இங்க நிறைய வேலை இருக்கு... எல்லாத்தையும் போட்டுட்டு வர முடியாது” அவன் சொல்ல, கோபமானார் அன்னபூரணி.

“டேய்... இங்க பெரிய பிரச்சனையே போய்கிட்டிருக்கு. நீ என்னன்னா, வேலைன்னு வரமாட்டேங்கிற... இதோ பாரு... மாமா மேல மதிப்பும் மரியாதையும் இருக்குன்னா, சீக்கிரம் வீட்டுக்கு வந்து சேரு...” சொல்லிவிட்டு அழைப்பைத் துண்டிக்க, இவனோ குழம்பிப் போனான்.

அப்படி என்ன பிரச்சனையை நித்தியா இழுத்து வந்திருக்கிறாள். இந்த வயசுக்கு உரிய பிரச்சனைன்னா கதலாக இருக்குமோ? காதல்னா பிடிச்ச பையனை கட்டி வைக்க வேண்டியதுதானே? குழப்பத்துடன், பொறுப்புகளை மனேஜரிடம் ஒப்படைத்து விட்டு ஊருக்குப் புறப்பட்டான் விமலநாதன்.

(2)

அழுது ஓய்ந்து படுக்கையில் கிழிந்த நாராகக் கிடந்தாள் நித்தியா. கரங்களோ வயிற்றை அழுந்தப் பற்றிக்கொண்டிருந்தது.

முடிஞ்சிருச்சு. எல்லாமே முடிஞ்சிருச்சு. அவளோட குழந்தை உலகத்தை காண முதலே அழிஞ்சிருச்சு. அழிய வச்சிட்டாங்க. வெறுப்பும் அழுகையுமாக விசும்பிக் கிடந்தவளிடம் வந்தாள் அவளுடைய தாய் பானுரேகா. பானுரேகாவின் முகமோ கோபத்தில் சிவந்து இறுகிப்போயிருந்தது.

“இதோ பாருடி... இன்னும் ஒரு வாரத்தில உனக்கும் விமலனுக்கும் திருமணம்...” சொல்ல விலுக் என்று நிமிர்ந்து பார்த்தாள் நித்தியா.

திருமணமா? அவளுக்கா? அதுவும் விமலநாதன் மாமாவையா? நோ.. முடியாது... மீண்டும் அழுகை உடைப்பெடுக்க,

“யாரைக் கேட்டு இந்த திருமணத்தை முடிவு செஞ்சீங்க...?” ஆத்திரத்துடன் கேட்க, சற்றும் தளராமல் பார்த்தாள் பானுரேகா.

“யாரைடி கேக்கணும்...?”

“என்னை கேக்கணும் மா...” அழுகையில் அவள் வெடிக்க, பானுரேகாவோ தன் மகளை அலட்சியமாகப் பார்த்தாள்.

“உன்னை கேக்கணுமா... நீ மட்டும் எங்க கிட்ட கேட்டுத்தான் எல்லாத்தையும் செஞ்சீயா?” கோபமாகக் கேட்க, அழுகையில் விம்மிவிட்டாள் நித்தியா.

“மா... நா எப்படிமா மாமாவை கட்டிப்பேன். அவருக்கு என்னை விட வயசு ஜாஸ்தி... அது மட்டுமில்ல, அவர் ஏற்கெனவே திருமணமானவர்... அவரை நா கட்டிக்க மாட்டேன்” அவள் மேலும் விம்ம,

“நீ மட்டும் என்ன பத்தினித் தெய்வமோ? காலேஜுக்கு படிக்க அனுப்பிச்சா, எவன் கூடவோ படுத்து எந்திரிச்சு புள்ளைய வயித்தில வாங்கிட்டு வந்திருக்க... உன்னை இனி எவன் கட்டுவான்? உனக்கு விமல் தம்பியே ஜாஸ்தி... வாயை மூடிட்டு அவனைக் கல்யாணம் கட்டிகிட்டு சந்தோஷமா வாழ்ற வழியைப் பாரு...” சொல்ல, தன்

தாயை முறைத்தாய் நித்திலா.

“நான் யாரையும் கல்யாணம் கட்டிக்க மாட்டேன் மாட்டேன் மாட்டேன்...” அவள் முடிவாகச் சொல்ல,

“என்னடி... உன் மவ விமலை கட்டிக்க மாட்டேங்கிறாளா...” என்றவாறு மீசையை முறுக்கிக் கொண்டு வந்தார் அவளுடைய தந்தை தணிகாசலம்.

அவர் வந்த தோரணையைக் கண்டதும் உடனே வாயை முடித் தலையைக் குனிந்து கொண்டாள் நித்தியா. தன் மகளை ஒரு முறைப்பு முறைத்தவர், பின் நிமிர்ந்து தன் மனைவியை வெறித்தார்.

“என்னடி உன் மவளுக்கு குளிர் விட்டுப்போச்சோ... என்னப் பத்தி தெரிஞ்சும் மாட்டேன்னு சொல்றாளா... இதப் பார்டி... உன் மவ கிட்ட சொல்லி வை... இப்பதான் அந்த பையன்... அவன் பேரு என்ன? ஆ... சத்தியன்... அவனோட கை காலை உடைச்சு குப்பைத் தொட்டில போட்டுட்டு வந்திருக்கேன். இதுக்கு மேல அடம்பிடிச்சான்னு வையி... அப்புறம் அந்த பையனோட உசுருக்கு நான் உத்தரவாதமில்லை...” தந்தை சொல்ல ஆடிப்போனாள் தித்தியா.

ஐயோ சத்தியனுக்கு என்னாச்சு? அவள் அழுது கதற, தன் மகளை முறைத்தார் தணிகாசலம்.

“இதப் பாரு புள்ள... மானம் மரியாதைக்கு மட்டுமில்ல, சாதி சனத்துக்கும் கட்டுப்பட்டு வாழ்றவங்க நாங்க... காதலிச்சவன் நம்ம ஜாதில நம்ம அந்தஸ்தில இருந்தாலாவது பறவாயில்ல. எங்கனயோ போயி சாக்கடைல ஒருத்தன காதலிச்சு அவன் புள்ளைய வயித்தில சுமந்திட்டு வந்திருக்கீயே... சீ... வெக்கமா இல்ல? வேற ஒருத்தன் அப்பனா இருந்திருந்தா இத்தனைக்கு உன்னையும் கொன்னு உன்னத் தொட்ட அந்த பொறம்போக்கையும் கொன்னு புதைச்சிட்டு போயிருப்பான். ஏதோ உன்ன பெத்த கடனுக்கும் பாசத்துக்கும் கட்டுப்பட்டு, உன் மேல கையை வைக்காம இருக்கேன்... அதையும் செய்யப் பண்ணிடாதே...” என்று வெறுப்போடு சொன்னவர், திரும்பி தன் மனைவியைப் பார்த்தார்.

“இதப் பாரு பானு... அந்தப் பையன் உசிரோட இருக்கணும்னா, விமல் கட்ற தாலிய கழுத்தை நீட்டி வாங்கச் சொல்லு... இல்லைன்னு வையி...” என்றவர் தோளில் இருந்த துண்டை எடுத்து உதறிவிட்டுப் போக விக்கித்துப் போய் நின்றாள் நித்தியா.

அவளுக்கு அவளுடைய தந்தையை நன்றாகத் தெரியும்.

தந்தை மட்டுமில்லை, உறவினர்களைப் பற்றியும் நன்றாகத் தெரியும். அவர்கள் எதுக்கு கட்டுப்படுகிறார்களோ இல்லையோ, ஜாதி சனத்துக்கு கட்டுப்பட்டு வாழ்றவங்க. அதுக்காக என்ன வேணா பண்ணுவாங்க. அதை நினைத்தவளுக்கு உடல் நடுங்கியது.

அதுக்காக, சத்தியனை மறந்துட்டு விமலநாதனோட எப்படி வாழ முடியும்? நினைக்கும் போதே மேலும் அழுகை வந்தது அவளுக்கு.

விமலநாதனின் திருமணம் நடந்த போது, நித்தியாவுக்கு பத்து. அவனுடைய திருமணத்தில் பாவாடை சட்டை அணிந்து இரட்டைப் பின்னலில் ஒற்றைப் பக்கம் மலர் மாலை சூடி, அவளை ஒத்த வயதுடைய பசங்களோடு ஓடியாடி விளையாடித் திரிந்தவள் இன்று அவனுக்கே மனையாளாகப் போகிறாள் என்றால் அதை என்ன என்று சொல்வது?

நித்தியா தாயிடம் முடியாது என்று எவ்வளவோ கெஞ்சி அழுதும் பானுரேகா அவளுடைய அழுகையைக் கருத்தில் எடுக்கவேயில்லை.

ஒரு கட்டத்தில் தன் அழுகைக்கு மதிப்பில்லை என்று தெரிந்ததும் ஓய்ந்து போனாள் நித்தியா.

தணிகாசலத்திற்கும் அவர் மனைவி பானுரேகாவிற்கும் நான்கு பிள்ளைகள். முதல் மூன்றும் ஆண்கள். கடைசியாகப் பிறந்தவள்தான் நித்தியா. படு சுட்டி. மூன்று ஆண்களுக்குப் பிறகு பிறந்ததால் அத்தனை பேருக்கும் செல்லம்

அதுவும் படிப்பில் கெட்டிக்காரியான நித்தியா பிளஸ் டூ நல்ல மதிப்பெண்களோடு பாஸ் பண்ணியதும், சிஏ படிக்கப் போகிறேன் என்று கேட்க, தன் மகளின் ஆசையை நிறைவேற்றி வைக்க நல்ல கல்லூரியாகப் பார்த்து சேர்த்து விட்டார் தணிகாசலம். ஊரிலிருந்து அந்தக் கல்லூரிக்குப் போய் வருவது சிரமம் என்பதால், நல்லதாக ஒரு ஹாஸ்டல் பார்த்து அங்கேயே தன் மகளைத் தங்கவைக்க, அதுவரை குடும்பம் என்கிற கூட்டுக்குள் வாழ்ந்தவள், முதன் முறையாக சுதந்திரக் காற்றை அனுபவித்தாள். அந்த சுதந்திரம் கொஞ்சம் அவளைத் தடுமாற வைத்தது.

அங்கேதான் சத்தியனைச் சந்தித்தாள்.

ஆரம்பத்தில் நட்பாகத்தான் பழகினார்கள். ஆனால் நாள் செல்ல செல்ல அந்த நட்பு ஒரு புள்ளியில் காதலாக மாறிப் போக, இளம் வயசுக்கு ஏற்ப, தொடுவதும்,

முத்தமிடுவதும் அணைப்பதும், என்று அவர்களின் காதல் வளர்ந்து ஒரு நாள் அது தன் எல்லையைக் கடந்து விட்டிருந்தது.

அப்போததான் ஹாலிடே என்று வீட்டிற்கு வந்த நித்தியா, ஒரு நாள் மயங்கி விழ, திணகாசலமும் பானுரேகாவும் பதறிப் போனார்கள்.

அன்னபூரணிதான் ஓடிப்போய் மருத்துவச்சியை அழைத்து வந்தார்.

அவளைப் பரிசோதித்த மருத்துவச்சி, அததனை பேரின் தலையிலும் பெரிய குண்டைப் போட்டாள்.

“ஏம்பா... உன்னோட பொண்ணு மூனு மாசம் முழுகாம இருக்கா... பையன் யாருன்னு பாத்து கட்டி வச்சிரு...” காதில் ஓதிவிட்டு போய்விட, வீடே ஆடிப்போனது.

படிக்க அனுப்பிச்சா காதலா கேக்குது உனக்கு? அடி வெளுத்து விட்டார் பானுரேகா. தன் மகளா இப்படிச் செய்தாள் என்று அதிர்ந்து போன தணிகாசலம் தன் மகன்களோடு பையன் யார் என்று விசாரித்து கண்டுபிடித்து அந்த சத்தியனை அடித்து நொறுக்கிவிட்டார்.

கூடவே மருத்துவச்சியை அழைத்து, அவள் வயிற்றில் வளரும் குழந்தையை அழித்துவிடச் சொல்ல, நித்தியாவோ மறுத்தாள். அழுதாள், துடித்தாள். கலங்கினாள். ஆனால் யாரும் அவளுடைய மறுப்பைக் கேட்கவில்லை. வயிற்றை சுத்தம் செய்த பின், உடனே தன் மகளுக்குத் திருமணம் செய்து வைத்துவிட வேண்டும் என்று முடிவெடுத்தார் தணிகாசலம்.

என்னதான் மறைக்க முயன்றாலும், ஊர்வாயை அடக்க முடியுமா? நித்தியாவின் செய்தி ஊர் முழுக்கப் பரவ, அது அந்தக் குடும்பத்திற்குப் பெரும் தலைக்குனிவு ஆனது.

அப்போதுதான் அன்னபூரணி ஒரு யோசனை சொன்னார்.

“ஏம்பா தணிகாசலம் நா ஒன்னு சொன்னா தப்பா நினைச்சுக்க மாட்டியே...” அவர் தயக்கமாகக் கேட்க,

“சொல்லுக்கா...”

“பேசாம நித்தியை நம்ம விமலனுக்கு கட்டிக் கொடுத்துடுவமா...?” அவர் கேட்க, முதலில் அதிர்ந்த தணிகாசலம் பின் யோசனையில் புருவங்களைச் சுருக்கினார்.

“அக்கா இது சரிவருமா?” என்றார் தயக்கமாக.

“ஏன் சரிவராதுங்கிறே...”

“இல்ல... நித்தியோட பிரச்சனை உனக்குத் தெரியும்ல...” கேட்க, சிரித்தார் அன்னபூரணி.

“அதப் பத்திப் பேசி என்னப்பா ஆகப்போகுது. பாக்கப்போனா என்னோட பையனும் கல்யாணம் முடிச்சு பொண்டாட்டிய இழந்தவன்தானே. அதுக்கு இது சரியாயிடுச்சு...”

“அதில்லக்கா... விமலநாதன் சம்மதிப்பானா...?”

“சம்மதிக்க வைக்கிற பொறுப்பு என்னோடதுடா... ஆனா நித்தியை சம்மதிக்க வை. அது போதும்...” தயங்க தன் தோளில் கிடந்த துண்டை எடுத்து உதறிய தணிகாசலம்,

“அவ என்ன மறுக்கிறது. நா கழுத்தை நீட்டுன்னா அவ நீட்டித்தான் ஆகணும்...” என்று உறுமியவர், செய்தியை பானுரேகாவின் காதில் சொல்ல, பானுரேகாவுக்கும் அது நல்லதாகவே பட்டது.

கெட்டுப் போன மகளை எப்படியாச்சும் கரை சேர்க்கணும். விமலநாதன் தங்கமான பிள்ளை. வயசுதான் சற்று அதிகம். அதனால என்ன, முன்னாடிலாம், அதிக வயசு வித்தியாசத்தோடதானே கட்டிகிட்டாங்க. இதை விட நல்ல சம்பந்தம் மகளுக்கு கிடைக்காது.

முடிவு செய்தவர், செய்திய நித்தியாகிட்ட சொல்ல, அவளோ முடியாது என்று ஒரே அழுகை.

அவள் அழுறதுக்கு வருத்தப்பட்டு அமைதி ஆயிட்டா, அப்புறம் கண்ணில விளக்கெண்ணை ஊத்தில அவளை காவல் காக்கணும். ம்கூம் அது சரிப்பட்டு வராது. இவளை விமலநாதனுக்கு கட்டி வச்சிட்டா, அதுக்கப்புறமா, அவன் பாடு, அவன் பொண்டாட்டி பாடு. மனதைக் கல்லாக்கிக் கொண்டு திருமணத்திற்கு வேண்டிய ஆயத்தங்களை செய்யத் தொடங்கினாள் பானுரேகா.

(3)

கெட்டிமேளம் கெட்டிமேளம்...

ஐயர் சத்தமாகச் சொல்ல நாதஸ்வரம் தவிலின் அதிரடி ஓசையில் பழனி ஆண்டவரின் முன்னால் நித்தியாவன் கழுத்தில் மூன்று முடிச்சுப் போட்டான் விமலநாதன். அவன் தாலியைக் கட்டும் நேரத்தில் இரண்டு பொட்டுக் கண்ணீர் அவன் கரங்களில் விழ நிமிர்ந்து பார்த்தான்.

அவளுடைய புது மனைவி, வெறும் பத்தொன்பதே வயதான இளம் பெண், அந்தத் திருமணம் பிடிக்காமல் விம்மலை அடக்க முடியாமல் அழுது கொண்டிருந்தாள். ஆனாலும் அவனால் எதுவும் செய்ய முடியாத நிலை.

தாய் வரச் சொன்னதும், என்னாச்சோ, ஏதாச்சோ என்று பதறி அடித்து வந்தவனிடம், செய்தியைச் சொல்ல ஆடிப்போனான் விமல்.

“அவ ஆசைப்பட்டவனையே கட்டி வைக்கவேண்டியதுதானே?” அவன் தயக்கமாகச் சொல்ல, அத்தனை பேரும் அவனை முறைத்தனர்.

“அதில்ல மாமா... மனசு ஒத்துக்கலைன்னா வாழ்க்கை நல்லா இருக்காதே...” அவன் தயங்க,

“அந்தப் பையனுக்கும் பத்தொன்பது வயசுடா. படிச்சு முடிக்கல. தொழில் கூட சரியா இல்ல. சொத்து பத்துன்னு ஒரு எழவும் இல்லை. இதில எதை நம்பி நம்ம பொண்ண அவனுக்கு கொடுக்க முடியும்...” அன்னபூரணி கேட்க,

“அதுக்காக... அவளை என் தலையில கட்டி வைக்க பாக்கிறியா? அம்மா அவ குழந்தைமா... அவளுக்கும் எனக்கும் வயசு வித்தியாசமே அதிகம்... இதில நான் எப்படி அவளை... இது சரிவராதுமா... புரிஞ்சுக்கோங்க...” அவன் சொல்ல, சடார் என்று அவன் காலில் விழுந்துவிட்டார் தணிகாசலம்.

“ஐயோ... மாமா என்ன பண்றீங்க. எந்திரிங்க...” அவன் பதற, எழாமல் கையெடுத்து கும்பிட்டவர்,

“சாமி... உன்ன என் மருமவனா நினைக்காம கடவுளா நினைச்சு கேக்கிறேன். என் பொண்ணை ஏத்துக்கப்பா... நீ அவளை ஏத்துக்கலைனா மானம் மரியாதைக்கு பயந்து நாங்க எல்லாரும் தற்கொலைதான்

பண்ணிக்கணும்... தயவு செய்து மாட்டேன்னு மட்டும் சொல்லிராதேபா....” அழுத அந்த மனுஷனைக் கண்டு பதறிப்போனான் விமல்.

“தயவு செஞ்சு எந்திரிங்க மாமா... பிளீஸ்... இப்ப என்ன? நான் நித்தியாவைக் கட்டிக்கணும் அவ்வளவுதானே. சரி... கட்டிக்கறேன். இப்ப எந்திரிங்க..” அவன் சொல்ல, அதற்குப் பிறகுதான் தணிகாசலம் எழுந்து நின்றார்.

மதிப்போடு நடத்திய மனுஷன் காலில் விழுந்து கெஞ்சினதுக்கு அப்புறமா எப்படிப் பிடிவாதத்தோட இருக்க முடியும்? வேறு வழியில்லாமல் சம்மதித்தான் விமலநாதன்.

இதோ நித்தியாவுக்கத் தாலியும் கட்டியாச்சு. ஆனால் மனசுதான் கிடந்து தவித்தது. இது சரி வருமா? ரெண்டு பேருக்குமே பிடிக்காத திருமணம் இது. அவன் இன்னும் சரிதாவை மறக்கல. இவளோ, அந்த சத்தியனைத்தான் நினைச்சிட்டிருக்கா. இந்த லட்சணத்தில திருமணம் வேற ஆயிடுச்சு. நாளைக்கு என்னாகும்? யோசிக்கும் போதே பயம் வந்தது விமலநாதனுக்கு.

“இந்த குங்குமத்த வச்சு விடுங்கோ...” ஐயர் சொல்ல, நடுவிரலால் குங்குமத்தை எடுத்துத் தயக்கத்தோடு நித்தியாவைப் பார்க்க, அவளோ, உலகமே அழிந்து போனது போல வெறுமையாக அவனைப் பார்த்தவாறு அமர்ந்திருந்தாள்.

அவனும்தான் என்ன செய்வான். அவனைப் படிக்க வச்சு ஆளாக்கின அந்த மனுஷன் கால்ல விழுந்து கதறினப்ப, அவனால் கல்லா இருக்க முடியலையே.

ஒரு பெருமூச்சோடு அவளுடைய நெற்றியில் பொட்டு வைத்து வகிட்டிலும் வைத்தவன், அடுத்து ஐயர் சொன்ன சடங்கு சம்பிரதாயங்களை முடித்துக் கொண்டு முழுசாக அவளை மனைவி ஆக்கிக் கொண்டான்.

வீடு வந்ததும், மணமக்களுக்கு ஆரத்தி சுற்றி உள்ளே அழைத்து வந்து பாலும் பழமும் கொடுக்க, வாங்க மறுத்தவள், அதை எல்லாம் தட்டிக் கொட்டிவிட்டுத் தன் அறைக்குள் புகுந்து கதவைச் சாற்றிவிட்டாள்.

அதைக் கண்ட தணிகாசலத்துக்கு கோபம் கட்டுக்கடங்காமல் வந்தது. கோபத்தோடு அவளை நோக்கி நகரப் போக, தடுத்துவிட்டான் விமலநாதன்.

“விடுங்க மாமா... அவ நிலைமை தெரிஞ்சுகிட்டும் கோபப்பட்டா என்ன அர்த்தம்...? அவளுக்கு பிடிக்காத திருமணம் இது. இதுக்கு மேல அவளை யாரும் வற்புறுத்த வேணாம்.. விட்டிடுங்க...” உறுதியாகச் சொல்ல அதற்கு

மேல் யாரும் எதுவும் பேசவில்லை. ஏதோ திருமணம் இதுவரை நடந்த முடிந்ததே அவர்களுக்குப் போதுமானதாக இருந்தது.

அன்று இரவு, நித்தியாவை வற்புறுத்தி விமலனின் அறைக்கு அனுப்பிவைத்தாள் பானுரேகா.

முரண்டு பிடித்தவளை தணிகாசலம் ஒரு முறைப்பு முறைக்க, அதற்கு மேல் அவள் மறுக்கவில்லை.

உள்ளே அறையில், யோசனையாக அமர்ந்திருந்த விமலநாதன், கதவு திறக்கும் சத்தம் கேட்டதும் நிமிர்ந்து பார்த்தான்.

நித்தியாதான், முகம் முழுக்க கோபமும் கலக்கமுமாக உள்ளே வந்தாள். கையில் செம்பு. ஒரு பெருமூச்சோடு படுக்கையை விட்டு எழுந்தவன், நித்தியாவை நெருங்க. ஆவளோ அகலக்கத்துடன் அவனைப் பார்த்தான்.

அந்தப் பார்வைக்கு அர்த்தம் புரிந்து கொண்டவனாக, அவளுடைய கையிலிருந்த செம்பை வாங்கி, அங்கிருந்த மேசையில் வைத்தவன்,

“உட்கார்...” என்றான் மென்மையாக.

இவளோ தயக்கமாக அவனைப் பார்த்தாள். அவளையும் மீறி உடல் நடுங்கியது.

அவள் நிலையைப் புரிந்து கொண்டவனாக,

“உட்கார் நித்தி...” அவன் சொல்ல, கன்னத்தில் வழிந்த கண்ணீரைத் துடைத்து விட்டு அங்கிருந்த இருக்கையில் அமர்ந்தாள்.

சற்று நேரம் எதுவும் பேசாமல் அப்படியே அமர்ந்திருந்தான் விமலநாதன். பின் நிமிர்ந்து அவளைப் பார்க்க, அவள் இன்னும் அழுதுகொண்டே இருந்தாள்.

“தோ பாரு நித்தி... என்னால உன்னை புரிஞ்சுக்க முடியுது. காதல் எதத்தனை பெரிய வலியைக் கொடுக்கும் என்கிறதை என்னால உணர்ந்துக்க முடியுது. ஏன்னா, நானும் சரிதாவை காதலிச்சுதான் கட்டிகிட்டேன். இன்னி வரைக்கும் அவளோட நினைப்பிலதான் வாழ்ந்துட்டிருக்கேன்...” அவன் சொல்ல அவனை நிமிர்ந்து பார்த்தாள் நித்தியா.

“ஆனா நாம அதிலயே உழன்னுகிட்டு இருந்தா வாழ்க்கை எப்படி முன்னேறும்... இனி உன் வாழ்க்கைல சத்தியனுக்கு இடமில்லைன்னு முடிவாயிடுச்சு... அதனால...” அவன் சொல்ல, அவனை வெறுப்போடு பார்த்தாள் நித்தியா.

“அதனால... உங்க கூட வாழணும்னு சொல்றீங்களா?” என்றாள் வெடுக்கென்று.

அதைக் கேட்டு மறுப்பாகத் தலை அசைத்தவன்,

“நா அப்படிச் சொல்லலையே நித்தி... நடந்து முடிஞ்சத பத்தி யோசிக்காம, இனி நடக்கப் போறதப் பத்தி யோசின்னு சொல்றேன்...” என்றான் அவன் நிதானமாக.

“எனக்கு உங்க கூட வாழப் பிடிக்கல...” இப்போதும் வெடுக்கென்றுதான் பதில் வந்தது.

“புரியுது.. அதுக்கு என்ன பண்ணனும்கிறே...?”

“எனக்கு விவாகரத்து வேணும்...” அவள் சொல்ல, இப்போது சிரித்தான் விமலநாதன்.

“லிசின்... வாழ்க்கைங்கிறது அத்தனை ஈசி இல்ல... நினைச்ச நேரம் திருமணம் முடிக்கிறதும், பிடிக்கலைன்னா விவாகரத்து பண்றதும் கற்பனைக்கு சுலபமா இருக்கும். ஆனா நிஜத்தில ரொம்ப கஷ்டம்...” அவன் சொல்ல, மறுப்பாகத் தலையை அசைத்தாள் நித்தியா.

“நா உங்க கூட வாழ மாட்டேன்... எனக்கு யாரும் வேணா... நா தனியே எங்காச்சும் போயிடுறேன்...” அவள் அழ, அவளைப் பரிதாபமாகப் பார்த்தான் விமலநாதன்.

“இங்க பாரு நித்தி... உன்னோட வலி வேதனை எல்லாமே எனக்குப் புரியுது. ஆனா நா சொல்றதை கேளு. எனக்கும் என்னோட சரிதாவை விட்டு வேற யாரையும் மனைவி ஸ்தானத்தில வச்சு யோசிக்க முடியல. ஆனா விதி நம்ம ரெண்டு பேரையும் சேத்து வச்சிருச்சு...”

“அதுக்காக நான் உங்க கூட வாழணும்னு சொல்லப் போறீங்களா? நிச்சமா என்னால முடியாது... சத்தியனைத் தவிர வேற யாரையும் என் புருஷனா ஏத்துக்க மாட்டேன்....” அழுத்தம் திருத்தமாக அவள் சொல்ல, அவளைப் பரிதாபமாகப் பார்த்தான் விமலநாதன். .

“நா என்ன சொல்ல வர்ரேன் என்கிறதைக் கூட புரிஞ்சுக்காம உடனே ஒரு முடிவுக்கு வந்தா என்ன அர்த்தம்? முதல்ல நான் சொல்றதை கேளு நித்திமா...” கண்டிப்போடு சொன்னவன்,

“இதோ பாருமா... நடந்தது நடந்துடுச்சு. இனி என்ன பண்ணலாம்னுதான் நாம யோசிக்கணும்... நா உன்னோட மனநிலையை புரிஞ்சுக்கறேன்... நா என்ன சொல்ல வர்ரேனா, நாம ஒன்னா இருக்கலாம். ஆனா தனித் தனியாக...” அவன் சொல்ல, அவன் என்ன சொல்ல வருகிறான் என்று புரியாமல் விழித்தாள் நித்தியா.

“என்ன புரியலையா?”

“ம்...”

“நித்திமா நாம ஏற்காடு போகலம். அங்க நம்ம பங்களாவில, நானும் நீயும்தான் இருப்போம். நம்மை கண்காணிக்க யாரும் இருக்க மாட்டாங்க. நீ உன்னோட இஷ்டத்துக்கு இருந்துக்கோ. நா என் இஷ்டத்துக்கு இருந்துக்கறேன். உனக்கு பிடிச்சா படிப்பை அங்கேயே கன்டினியூ பண்ணனு. ஒரு வருஷம் போகட்டும். அப்பவும் நீ அந்த சத்தியனை மனசில நினைச்சிக்கட்டு இருந்தேன்னா, நானே உங்க ரெண்டு பேரையும் சேத்து வைக்கிறேன்... அப்படி ஒரு வேளை உனக்கு சத்தியன் வேணாம்னு நினைச்சா, உனக்கு வேற வாழ்க்கையை அமைச்சுக் கொடுக்கறேன்... என்ன சொல்றே” அவன் சொல்ல, அதிர்ந்து போய் அவனைப் பார்த்தாள் நித்தியா.

“மா... மாமா... நீங்க... நீங்க நிஜமாத்தான்... சொல்றீங்களா...” அவள் திணற, மென்மையாகச் சிரித்தான் விமலநாதன்.

“நான் உன்னை ஆசைப்பட்டு கட்டிகிட்டேன்னு நினைச்சியா...?” கேட்டவன் மறுப்பாகத் தலையை அசைத்து,

“இல்ல... உன் அப்பாவுக்காகத்தான் உன்னை கட்டிக்க சம்மதித்தேன். அவர் கால்ல விழுந்து கெஞ்சினப்ப என்னால மறுக்க முடியல... மன்னிச்சிரு...” அவன் சொல்ல அழுதாள் நித்தியா.

“என்னால சத்தியனை மறக்க முடியாது மாமா...”

“புரியுது நித்திமா. அதுதான் நான் இருக்கேன்னு சொல்லிட்டேன்ல? அப்புறம் என்ன?முதல்ல கண்ண துடைச்சுக்கோ. யார் என்ன செஞ்சாலும் சரி, நா உனக்காக இருக்கேன் சரியா...” அவன் சொல்ல, பாய்ந்து அவனை இறுக அணைத்துக் கொண்டாள் நித்தியா.

“ஏய்.. என்ன செய்றே...”

“தாங்ஸ் மாமா... என்னோட வாழ்க்கையே அழிஞ்சிருச்சுன்னு நினைச்சேன். ஆனா திரும்ப அதைப் புதுப்பிக்கறீங்க...” விசும்ப அவளுடைய தோடைத் தட்டிக் கொடுத்தவன், அவளைத் தன்னிடமிருந்து பிரித்து,

“சரி அழுதது போதும். எதுவா இருந்தாலும் பாத்துக்கலாம். இப்ப தூங்கு...” என்றான் அக்கறையாக.

“மாமா..” என்றாள் நித்தியா.

“சொல்லு...”

“நாம நாளைக்கே ஏற்காடு போயிடலாமா?” என்றாள் விசும்பியவாறு.

“நாளைக்கேவா?”

“ம்... எனக்கு யாரோட மூஞ்சியும் பாக்க புடிக்கல. என் வாழ்க்கையையே அழிச்சிட்டாங்க. இனிமே அவங்க முகத்திலயே நா முழிக்க மாட்டேன்...” உறுதியாகச் சொல்ல, மெல்லியதாகச் சிரித்தான் விமலநாதன்.

“நீர் அடிச்சு நீர் விலகாது நித்தி... இப்ப அவங்க மேல கோபம் இருக்கும். ஆனா நாளைக்கு முன்னப் பின்ன அவங்களுக்கு கஷ்டம் வந்திடுச்சுன்னா, முத ஆளா நிக்கிறது நீதான்...” அவன் சொல்ல மறுப்பாகத் தலையசைத்தாள் நித்தியா. பின் தன் வயிற்றைத் தொட்டு,

“என்னோட பாப்பாவை அழிச்சிட்டாங்க...” அவள் விசும்ப, சட்டென்று அவளை இழுத்து மார்பில் போட்டு அணைத்துக் கொண்டான் விமலநாதன். அவளுடைய முதுகை வருடிக் கொடுத்தவன்,

“ஷ்... அழாதே நித்தி...! அந்த குழந்தை உலகத்தில ஜனிக்கணும்னு இருந்திருந்தா, அதை யாராலும் தடுத்திருக்க முடியாது. அது போகணும்னு இருந்திருக்கு. போயிடுச்சு. அழாதேமா.... பிளீஸ். நீ அழுதா பாக்க கஷ்டமா இருக்கு நித்தி..” அவன் கூற, அவன் தோள் சாய்ந்து அழுதவாறே உறங்கிப் போனாள் நித்தியா.

(4)

மறு நாள் எழுந்ததும், பேச வந்த தாயிடம் முகம் கொடுத்துக் கூடப் பேசவில்லை நித்தியா. அன்னபூரணியிடம் மட்டும் கொஞ்சம் பேசினாள். தந்தையை ஏன் என்று கூடக் கேட்கவில்லை. அறைக்குள்ளேயே முடங்கிக் கிடந்தாள் நித்தியா. சாப்பிடக் கூட வரவில்லை.

விமலநாதன்தான் மற்றவர்களை சமாதானம் செய்தான்.

“எல்லாம் சரியாயிரும் அத்த. நித்திய பத்தி உங்களுக்குத் தெரியாதா. கோபம் வந்தா இப்படித்தான் நடந்துப்பா. கோபம் தீர்ந்ததும் தானா உங்க கிட்ட வந்திடுவா. இப்ப மனசளவில பாதிப்படைஞ்சிருக்கா. அது சரியானதும் உங்களை ஏத்துப்பா... விடுங்க...” அவன் சொல்ல, கண்கள் கலங்கினார் பானுரேகா.

“அவ நன்மைக்காகத்தான் தம்பி இதெல்லாம் செய்றோம்...”

“அதை அவ புரிஞ்சுக்கணும்ல. காதல் கொண்ட மனசு. சட்டுன்னு எல்லாத்தையும் மறந்திடாது. நாம கொஞ்சம் அவகாசம் கொடுக்கணும். அவ சீக்கிரமே எல்லாத்தையும் புரிஞ்சுப்பா...” என்றவன் சற்றுத் தயங்கிவிட்டு,

“இன்னிக்கே ஏற்காடு போகலாம்னு நினைச்சேன்...” அவன் சொல்ல, முறைத்தார் அன்னபூரணி.

“டேய்... இன்னும் சடங்குகள் எதுவும முடியலடா... அதுக்குள்ள போறேன்னு சொல்றே. இதில கல்யாணத்துக்கு வராதவங்க இனித்தான் வருவாங்க... அவங்க வர்ரப்ப நீங்க இல்லைன்னா எப்படி...?” அவர் கேட்க, தாயை கோபமாகப் பார்த்து முறைத்தான் விமலநாதன்.

“அம்மா... புரியாம பேசாதே... எல்லாருமா சேத்து அவ மனச நோகடிச்சிருக்கீங்க. இந்த நிலையில அவ சமாதானம் ஆகி, நார்மலா நடந்துக்கணும்னா எப்படி? இதில நேத்து பாலும் பழமும் கொடுக்கிறப்ப என்னாச்சுன்னு தெரியும்ல. இதையே வர்ரவங்க முன்னாடியும் பண்ணினா, அவங்க என்ன நினைப்பாங்க? எந்த சடங்கு சப்பிரதாயங்களும்

வேணாம்... அதுதான் நீங்க ஆசைப்பட்ட மாதிரி கல்யாணம் ஆயிடுச்சில்ல. அப்புறம் என்ன?" கேட்டவன் பானுரேகாவைப் பார்த்து,

"சாரி அத்த... இங்க இருக்கிறது அவளுக்கும் நல்லதில்லை. உங்களுக்கும் நல்லதில்லை. அவளுக்கு உங்க எல்லாரையும் பாக்கிறப்ப, கோபம் இன்னும் அதிகமாகுமே தவிர, குறையாது. புரிஞ்சுக்கங்க... இதையும் மீறி பிடிவாதமா அவளை சடங்குன்னு செய்ய வச்சா, அது உங்க மேல இருக்கிற கோபத்தையும் வெறுப்பையும் இன்னும் அதிகமாக்கிகிட்டே இருக்கும். கொஞ்சம் அவளுக்கும் டைம் கொடுக்கலாம். கோபம் தணிஞ்சதும் திரும்பி வர்ரோம்..." சொல்ல, அதற்கு மேல் மறுக்க முடியாமல் சம்மதித்தனர் பெரியவர்கள்.

விடைபெறும் போது, இவன் மட்டும்தான் விடைபெற்றுக் கிளம்பினான். அவளோ திரும்பியும் பார்க்கவில்லை.

விமலநாதன், அன்றே அவளை அழைத்துக் கொண்டு ஏற்காடு வந்து சேர்ந்தான்.

விமலனின் எஸ்டேட் வீடு மிக நேரத்தியாக இருந்தது. நான்கு படுக்கையறைகள். கிச்சன், ஹால், லிவிங் ரூம் என்று மிக அழகான வீடு.

வீடு வந்ததுமே, தன் அறைக்குப் பக்கத்து அறையை நித்தியாவுக்கு கொடுத்திருந்தான் விமலநாதன். நல்ல விஸ்தாரமான பெரிய அறை. அவளுடைய அறையைக் காட்டியதும் வீடு முழுவதையும் சுற்றிக் காட்டினான் விமலநாதன்.

"வெளி வேலை பாக்கிறதுக்கு ஆட்கள் இருக்காங்க நித்தி. சமையலுக்கு மட்டும் ஒரு அம்மா வந்து சமைச்சு வச்சிட்டு போவாங்க. உனக்கு பிடிச்சது ஏதாச்சும் சாப்பிடணும்னா அவங்க கிட்ட சொல்லிடு. செஞ்சு கொடுபாங்க..." என்றவன், தோட்டத்திற்கு அழைத்து வந்தான்.

நல்ல பெரிய தோட்டம். ஒரு பக்கமாக காய்கறியும் போடப்பட்டிருந்தது.

அவள் ரசிச்சுப் பார்ப்பதைக் கண்டவனுக்கு நிம்மதியாக இருந்தது. ஏதோ அவள் சந்தோஷமா இருந்தாலே போதும்னு தோன்றியது அவனுக்கு.

அன்று இரவு, சாப்பிடுவதற்காக, நித்தியாவை அழைத்துச் செல்ல அவளுடைய அறைக்கு வந்திருந்தான் விமலநாதன்.

இவன் கதவைத் தட்ட, தலையைத் துவட்டியவாறு கதவைத் திறந்த நித்தியாவைக் கண்டு, ஒரு கணம்

அதிர்ந்து போனான் விமலநாதன்.

இவன் கதவைத் தட்டவும், குளித்துக் கொண்டிருந்தவள், அவசரமாக ஆடை மாற்றிவிட்டு ஓடிவந்து கதவைத் திறந்திருக்கிறாள் போல. ஈரம் காயாத தேகத்தில் மெல்லிய வெண்நிற காட்டன் சுரிதார் டாப், பட்டதும் அத்தனை ஈரத்தையும் அது உறிஞ்சி எடுத்திருக்க, அந்தப் பெண்மையின் நெளிவு சுழிவு அணைத்தையும் அந்த சுரிதார் டாப் அப்பட்டமாக வெளியே காட்டிக்கொண்டிருந்தது.

அதைக் கண்டவனுக்கு ஒரு கணம் மூச்சடைத்துப் போனது.

சத்தியமாக இத்தகைய ஒரு காட்சியை அவன் நினைத்துக் கூடப் பார்க்கவில்லை.

அதுவும் அவன் கட்டிய தாலி அவளுடைய மார்பின் மத்தியில் தொங்கிக்கொண்டிருக்க, அதைக் கண்டவனுக்கு நெஞ்சில் பூப் பூத்தது. இன்னும் அதை அவள் கழற்றி எறியாமல் கழுத்தில் சுமந்திருப்பது ஒரு மாதிரி பிடித்திருந்தது. அவனையும் மீறி அவள் என்னவள் என்கிற உரிமை அவனுக்குள் தோன்ற, கண் இமைக்காமல் மேலும் அவளை வெறித்தான் விமலநாதன்.

முன்பு வெறும் சின்னப் பெண்ணாகத் தெரிந்தவள், இப்போது கோவில் சிற்பத்திற்கும் சவால் விடுவது போல, அங்கங்கள் திரண்ட குமரியாகத் தெரிந்தாள்.

அதுவும் கழுத்தில் தொங்கிய மஞ்சள் கயிற்றில் நிலைத்த விழிகள், மெதுவாக கீழிறங்கி மார்பில் முடிந்திருந்த தாலியில் நிலைத்து, அப்படியே அப்படியே சற்றுப் பக்கமாக நகர, உள்ளாடை எதுவும் அணியாத இரட்டைக் கனிகளும், நான் சின்னவளில்லை, பருவம் கண்ட செழித்த பெண் என்று அவனுக்கு அறிவுறுத்த, ஒரு மாதிரி ஃபிரீஸ் ஆகி நின்றான் விமலநாதன்.

அவளுக்கு குளிர்ந்திருந்தது போல. இரட்டை முலைக் காம்புகளும் விடைத்துப் போய் சுரிதார் டாப்பைக் கிழித்து விடுவது போல துருத்தி நின்றிருக்க, அதைச் சுற்றிய முலைக்காம்பு விட்டமோ, கண்ணுக்கு விருந்தாய் அப்பட்டமாக அந்த சுரிதாரை மீறி வெளியே தெரிந்தது. அதைக் கண்டு எச்சில் கூட்டி விழுங்கினான் விமலநாதன்.

கரங்களோ பரபரபத்தது. அவற்றை அள்ளி எடுத்து வருடிக் கொள்ள ஆசை வந்தது. அந்த இரட்டை நிலவின் சுவையினை அறிய நாக்கு தவித்தது. இரண்டுக்கும்

மத்தியில் அவன் தடுமாறி நின்றிருக்க,

“என்ன மாமா?” நித்தியா கேட்ட பிறகுதான் சுயத்திற்கு வந்தான் விமலநாதன். இன்னும் அவனால் அவளுடைய திரண்ட கனிகளிடமிருந்து தன் பார்வையை விலக்க முடிந்திருக்கவில்லை.

“மாமா... என்னாச்சு?” கேட்டவள் மேலும் தலையைத் துடைக்க, அந்த இரட்டைக் கோபுரங்களும் அந்த சின்ன அசைவுக்கும் நின்று பிடிக்காது ஆட்டம் காண, அவனுடைய ஆண்மைக்கோ பெருத்த வலி.

‘ஐயோ... என்ன இவ இப்படி பண்றா...’ தடுமாறி நின்றவன், எப்படியோ தன்னை சமாளித்து,

“அது... சா.. சாப்பாடு ரெடி நித்தி...” என்றான் திக்கித் திணறி.

“எனக்குப் பசிக்கல... வேணாம்...” சொன்னாள் நித்தியா. இப்போது அவளுடைய முகத்தைப் பார்த்தவன்,

“இப்ப எதுக்கு வேணாங்கிறே...? நேரத்துக்கு நேரம் சாப்பிடணும் நித்திமா.. வா சாப்பிட...” அவன் சொல்ல, அதற்கு மேல் மறுக்காமல், தலையைத் துடைத்துக் கொண்டிருந்த துண்டை ஓரமாகப் போட்டுவிட்டு அவனோடு வர முயல, தடுத்தான் விமலநாதன்.

“நித்தி... முதல்ல போய்... ஷால் போட்டுட்டு வா...” அவன் சிரமப்பட்டுத் தன் விழிகளை விலக்கிக் கூற, குழம்பினாள் நித்தி.

“ஏன் மாமா.. என்னாச்சு...?”

“ப்ச்... சொன்னா கேளு நித்தி... போய் ஷால் போட்டுட்டு வா...” அவன் கூற, சரி என்று உள்ளே வந்தவள், அப்போதுதான் அங்கிருந்த நிலைக் கண்ணாடியில் தன்னைப் பார்த்தாள்.

ஈரமான உடம்போடு ஒட்டியிருந்த மேலாடை, உள்ளாடை அணியாத அவளுடைய இரட்டைக் கனிகளையும் அப்பட்டமாக வெளியே காட்டிக்கொண்டிருந்தது.

ஹாஸ்டலில் உறங்கும் போது, உள்ளாடைகள் அணிவதில்லை. அந்தப் பழக்கத்தில், இரவு உறங்குவதுதானே என்பதால், இறுக்கத்தைத் தளர்த்தி வெறும் டாப் மட்டும் அணிந்திருந்தாள் நித்தியா. அது இப்படி மானத்தை வாங்கும் என்று நினைக்கவில்லை.

“ஐயோ... இதை மாமா பாத்துட்டாரா?” சங்கடம் எழும்ப, அவசரமாக ஷால் ஒன்றைப் போட்டவாறு வந்தவள், வாசலில் நின்றிருந்த விமலனைக் கண்டு சங்கடமாகத்

தலை குனிய,

“சரி வா... சாப்பிட்டு படுக்கணும். நாளைக்கு எனக்கு நிறைய வேலை இருக்கு...” அழைத்துச் சென்றான் விமலநாதன்.

டைனிங் டேபிலில் வரைட்டியாக உணவுகள் வைக்கப்பட்டிருந்தன.

“உனக்கு புடிச்ச பட்டர் சிக்கன், நான், சிக்கட் டிக்கா, அப்புறம் உனக்கு நூடில்ஸ் பிடிக்கும்ல.. அதுவும் இருக்கு சாப்பிடு...” அவன் சொல்ல அவனை வியந்து போய் பார்த்தாள் நித்தியா.

“எனக்கு என்ன புடிக்கும்னு உங்களுக்குத் தெரியுமா மாமா?” அவள் வியக்க சிரித்தான் விமலநாதன்.

“நீ பிறந்ததில இருந்து உன்னை பாத்துட்டு வர்ரேன். உன்னப்பத்தி எனக்குத் தெரியாதா. உனக்கு என்ன புடிக்கும், புடிக்காது என்கிறது எல்லாம் எனக்கு அத்துப்படி... சாப்பிடு...” அவன் சொல்ல, ஏனோ கண்களில் கண்ணீர் வந்தது நித்தியாவுக்கு.

சத்தியனுக்கும் அவள் மீது அளவிட முடியாத காதல் உண்டு. அவள் ஆசைப்பட்டது எல்லாம் வாங்கிக் கொடுக்கத்தான் நினைப்பான். ஆனால் அவனிடம் வசதி இருக்காது. அவனுடைய நிலைக்கு வேர்க்கடலை, சுண்டல் இப்படி ஏதாச்சும் வாங்கிக் கொடுப்பான்.

அவன் நினைனவில் கண்கள் கலங்க, அந்த உணவையே வெறித்துப் பார்த்தாள் நித்தியா.

“என்ன பாத்திட்டே இருக்கே... சாப்பிடு...” அவன் சொல்ல,

“புடிக்கல மாமா...” என்றாள் தவிப்பாக.

“அது எப்படி புடிக்காம போகும். மத்தியானம் கூட சரியா சாப்பிடல....” என்றவன் தன் தட்டில் இருந்ததை அள்ளி அவளுடைய வாயில் வைக்க, இப்போது மறுக்காமல் வாங்கிக்கொண்டாள் நித்தியா.

அவளுக்கு பழைய நினைவுகள் தொடராய் வந்தது.

அவனுடைய தந்தை இறந்ததும், அன்னபூரணி தணிகாசலத்தை நம்பி அவர் கூட வந்துவிட்டார். அவரும் தன் அக்காவை பக்கத்திலேயே குடியமர்த்தி, அவருக்கு வேண்டியதைப் பார்த்துக் கொண்டார்.

அன்னபூரணிக்கு நித்தியா என்றால் கொள்ளைப் பிரியம். ஏன் என்றால் அவள் மட்டும்தான் அவர்களின் வீட்டுக்கே பெண் குழந்தை. மத்தது எல்லாம் பசங்க. அதனால் எப்போதும் அவளை இடையில்

வைத்துக்கொண்டு திரிவார் அன்னபூரணி. பானுரேகா கூட சொல்லுவாள்,

“அண்ணி.. ஏன் எப்ப பாத்தாலும் அவளை இடையில தூக்கிட்டு திரியறீங்க... இடுப்பு வலிக்காதா?” சொன்னாலும் அன்னபூரணி கேட்க மாட்டாள். அவளைத் தன்னோடு அழைத்துச் சென்று கையோடு வைத்துக் கொள்வாள்.

நித்தியா கூட, எப்போதும் தன் வீட்டில் இருப்பதை விட, அத்தை அன்னபூரணி விட்டில்தான் அதிகம் இருப்பாள். இவளுக்கும் விமலநாதனை ரெம்ப பிடிக்கும். அவன் திருமணமாகிப் போகும் வரைக்கும் அவன் கூடதான் விளையாடுவாள்.

படித்துக் கொண்டிருக்கும் அவனிடம் ஓடிச் சென்று அவனுடைய மடியில் ஏறி உட்கார்ந்து கொள்வாள். அவனும் கண்டிக்க மாட்டான். அவளைத் தூக்கி மடியில் வைத்தவாறு படிப்பைத் தொடர்வான். சாப்பிடும் போது அவளுக்கும் ஊட்டி விடுவான். தவறு செய்தால் திட்டுவான். இப்படி நிறைய.

இவளும் சும்மா இல்லை. நிறையவே குரங்கு சேட்டைகள் செய்வாள். ஆனால் காலத்தின் சூழ்ச்சியில் ஏதோ ஒரு புள்ளியில் எல்லாமே மாறிடுச்சு.

அந்தப் பழைய நினைவில் கண்கள் கலங்க, அவன் நீட்டிய உணவை வாங்கிக் கொண்டாள் நித்தியா.

“இப்ப எதுக்கு அழுறே...?”

“ப.. பழசு நினைவுக்கு வந்திருச்சு...” அவள் சொல்ல அதைக் கேட்டு சிரித்தான் விமலநாதன்.

“ம்... அப்ப நீ ரொம்ப சின்ன பொண்ணு. எப்ப பாத்தாலும் எங்க வீட்லதான் டோரா போடுவே... என் மடியில உக்காந்துகிட்டு முடிய புடிச்சு இழுப்பே. இரவில என்னை கட்டி புடிச்சிட்டு தூங்குவே. அதெல்லாம் மறக்க முடியாதுல நித்தி” அவன் சொல்லிச் சிரிக்க, அவளும் நீண்ட நாட்களுக்குப் பிறகு அதைக் கேட்டு மனம் விட்டு சிரித்தாள்.

(5)

நித்தியாவுக்கு ஏற்காடு ரொம்பப் பிடித்துப் போனது. புதிய இடம், புதிய சூழ்நிலை, இதமான காலநிலை. அடிக்கடி பெய்யும் மழை என்று எல்லாமே அவளுக்கு விருப்பமானது போல அமைந்து போனது.

இப்படியே நாட்கள் மெல்ல மெல்ல நகர்ந்தன. நித்தியாவும் தன் இறுக்கத்தை விட்டு, விமலாதனோடு மனம் விட்டுப் பேசிப் பழகத் தொடங்கினாள்.

விமலநாதனும், நித்தியாவின் மன மகிழ்ச்சிக்காக, அவளை ஒவ்வொரு இடங்களாக அழைத்துச் சென்று காட்டி அவளை மகிழ்வித்தான்.

அன்று காலை உணவு முடிந்ததும் அவளை அழைத்துக் கொண்டு எஸ்டேட் சுத்திக்காட்டக் கிளம்பினான் விமலநாதன்.

“குளிரும் சுவட்டர் ஏதாச்சும் போட்டுட்டு வா...” அவன் எச்சரிக்க, அவன் சொன்னது போலவே போட்டுக்கொண்டு வந்தாள் நித்தியா.

அவனுடைய எஸ்டேட்டைப் பார்த்து வாயைப் பிளந்தாள் நித்தியா.

“இது எல்லாம் உங்களோடதா?” வியந்து கேட்க,

“ம்... ஆமா...” என்றவன் திரும்பி அவளைப் பார்த்து,

“மேற்கொண்டு படிக்கிற எண்ணம் இருக்கா? இல்லை... இப்படியே விடப் போறியா...?” கேட்டான் அவன்.

“ம் படிக்கிறேன் மாமா...”

“நீ சிஏ தானே படிச்சே...?” அவன் கேட்க மேலும் வியந்தாள் நித்தியா.

“உங்களுக்கு நா என்ன படிச்சேன்னு தெரியுமா?”

“ம்... அம்மாகிட்ட பேசும்போது எல்லாம் சொல்வாங்க... உன் விஷயம் என்கிறதால கொஞ்சம் காது கொடுத்து கேப்பேன்...” சொன்னவன் அங்கிருந்த ஒரு அம்மன் கோவிலுக்கு அவளை அழைத்துச் சென்றான்.

“வா... சாமி கும்பிட்டு கெளம்பலாம்...” அவன் சொல்ல மறுத்தாள் நித்தியா.

“எனக்கு சாமி மேல இருந்த நம்பிக்கை போயிருச்சு... நான் வரல...” அவள் சொல்ல, இப்போது சற்று கோபமாக அவளைப் பார்த்ததான் விமலநாதன்.

“மனுஷன் செய்ற தவறுக்கு சாமி என்ன பண்ணும்...? பேசாம வா நித்தி...” என்றவன், அவள் மேலும் தயங்க, சட்டென்று அவளுடைய கரத்தைப் பற்றி, உள்ளே இழுத்துச் செல்ல, வேறு வழியில்லாமல் உள்ளே சென்றாள்.

சாமி தரிசனம் முடிந்ததும், விபூதி குங்குமம் வைத்துக் கொண்டு இருவரும் வெளியே வர, மூன்று பேர் அவர்களைக் கடக்க முயன்று, தயங்கி நின்றார்கள்.

“ஹே... விமல்... என்ன இந்தப் பக்கம்..” என்றவாறு அழகான நவநாகரிக யுவதி அவன் முன்னால் வந்து நிற்க,

“ஹாய் ஜெனிபர்... எப்படி இருக்கீங்க.?” பதிலுக்கு கேட்டான் இவன்.

“என்ன கேள்விக்கே பதில் கேள்வியா?” அவள் கிண்டலாகக் கேட்க,

“அப்படிலாம் இல்லீங்க... கோவிலுக்கு வந்தேன்...” அவன் சிரிக்க, பதிலுக்கு சிரித்த ஜெனிஃபர்,

“நான் நல்லா இருக்கேன்...” சொன்னவளின் பார்வை என்னவோ அவனுக்குப் பக்கத்தில் நின்றிருந்த பெண்ணிடம் நிலைத்தது.

“இவங்க...?” இழுக்க,

“இது என்னோட வைஃப்... நித்தியா..” அவன் அறிமுகப் படுத்த ஒரு விநாடி வாடிப்போனது ஜெனிஃபரின் முகம்.

“வைஃபா...? ஆனா..” எதையோ சொல்ல வந்து பின் தயங்கி நிற்க,

“ம்... ஆமாங்க... அவசர கல்யாணம்... அதனால யாரையும் இன்வைட் பண்ண முடியல..” அவன் சொல்ல,

“அதனால என்னங்க... ஒரு நாளைக்கு எங்களை எல்லாம் கூப்பிடுங்க... வந்திடுறோம்...” என்ற ஜெனிபர், அதற்கு மெல் தாமதிக்காமல்,

“சரி... நா கெளம்பறேன்...” என்றுவிட்டு விடைபெற்றுச் சென்றுவிட, நித்தியா யோசனையோடு அந்தப் பெண்ணையும், அவனையும் ஏறிட்டாள்.

பார்த்தால் முப்பது வயது இருக்கும் அந்தப் பெண்ணுக்கு. மிக அழகாத்தான் இருக்கா. எதுக்கு மாமாவுக்கு

திருமணம் ஆயிடுச்சு என்னதும் கவலையா பாத்தாங்க? யோசனையோடு விமலனை ஏறிட்டவள்,

“யாரு மாமா அது..?”

“அதுவா... நம்ம எஸ்டேட்டுக்கு பக்கத்தில ஒரு எஸ்டேட் பாத்தோமே... அது இவங்களோடதுதான்...”

“ஓ... அவங்களுக்கு உங்களைப் புடிக்குமோ?” அவள் கேட்கத் திரும்பிப் பார்த்தான்.

“ஏன் கேட்கிறே?”

“இல்ல... உங்களுக்க திருமணம் ஆச்சுன்னு தெரிஞ்சதும், அவங்க முகம் வாடிப் போச்சு. அதுதான் கேட்டேன்..”

“ம்... மூனு வருஷத்துக்கு முன்னாடி என்கிட்ட வந்து திருமணம் செஞ்சுக்கலாமான்னு கேட்டாங்க. நான் மறுத்துட்டேன். ஆனாலும் அவங்க முயற்சிய விடல. அப்பப்ப பேசும்போது அதை மறைமுகமா சொல்வாங்க...”

“பாவம்ல அவங்க. உங்களுக்கு திருமணம் ஆயிடுச்சு என்னதும் முகம் வாடிடுச்சு. நா வேணா அவங்க கிட்ட போய் பேசவா...”

“என்ன பேசப் போறே..?”

“இல்ல... இது நிரந்தரமில்ல... ஒரு வருஷத்தில நாம பிரிஞ்சிருவோம்னு சொல்லிட்டு வரவா..?” அவள் கேட்க திரும்பி அவளை அழுத்தமாகப் பார்ததான் விமலநாதன்.

அவள் ஜோக் அடிக்கிறாளா, இல்லை நிஜமாகவே சொல்கிறாளா? அவளுடைய முகத்தை ஆராய்ந்தவன்,

“அது எதுவும் வேணாம் பேசாம வா...” சொன்னவனுக்கு ஏனோ கோபம் வந்தது.

இப்போ எதுக்கு அவன் கோபப் படுறான்? இதை அவன்தானே சொன்னான்.

“அதில்ல மாமா...”

“ஷட் அப் நித்தி...” அவன் கொடுத்த சத்தத்தில் வாயடைத்துப் போனாள் நித்தியா.

இது நாள் வரை, விமலநாதன் அவளைக் கோபமாகப் பார்த்ததில்லை. திட்டியதில்லை. மதுவும் ஏற்காடு வந்த இந்த ரெண்டு மாசமா அவன் கனிவாகத்தான் நடக்கிறான். ஆனால் இப்போது ஏன் இத்தனை கோபம். அவள் அப்படி என்ன தப்பா சொல்லிட்டாள். இன்னும் எட்டு மாசத்தில அவள் பிரிஞ்சு போய்விடுவாள். அதுக்கு அப்புறமா இவன் தனியேதானே இருக்கணும். அதுக்கு

அந்த ஜெனிபரை திருமணம் செஞ்சுகிட்டா சந்தோஷமா இருப்பான்ல...

“எதுக்கு மாமா கோபப் படுறீங்க... உங்க நன்மைக்குத்தானே..” அவள் முடிக்கவில்லை, அவளை முறைத்தவன்,

“ஒரு மயிரும் வேணாம்... வாயை மூடிட்டு வா...” சொன்னவனுக்கு இன்னும் தன் கோபத்தைக் கட்டுக்குள் கொண்டு வர முடியவில்லை.

அது எப்படி அவள், அப்படி சொல்லாம். இவள் யாரு ஜெனிபரை எனக்கு கோர்த்து விட? ஆத்திரத்தோடு நினைத்தவனுக்கு இப்போது குழப்பம் வந்தது.

நா எதுக்கு இப்ப கோபப் படுறேன். அவ அப்படி என்ன தப்பா சொல்லிட்டா. அன்னிக்கு பேசினதை வச்சுதானே சொல்றா? அதுவும் எனக்காக யோசிச்சு சொல்றா. அப்படி பாத்தா நா சந்தோஷப் படணும், அனா கோபம் வருதே. ஏன்?

குழம்பியவன், திரும்பி நித்தியாவைப் பார்த்தான். அவளோ தலை குனிந்தவாறு வந்துகொண்டிருந்தாள். முகம் வாடியிருந்தது. அவனுடைய கோபத்தை அவளால் தாங்கிக் கொள்ள முடியவில்லை போ.

சட்டென்று அவளுடைய கரத்தைப் பற்ற, நின்று நிமிர்ந்து பார்த்தாள் நித்தியா.

“சா... சாரி நித்தி... நா அப்படி ஹார்ஷா பேசி இருக்க கூடாது. திடீர்னு நீ என்னை விட்டுட்டு போறேன்னு சொன்னதும், ஏதோ ஒரு மாதிரி ஆயிடுச்சு. சட்டுன்னு கோபம் வந்திருச்சு...” அவன் சமாதானம் சொல்ல, இப்போது வாடிய முகம் மலர்ந்தது.

“பரவாயில்ல மாமா... நா போனதுக்கு அப்புறமா நீங்க தனிச்சிடக் கூடாது... அதாலதான் அப்படி சொன்னேன்...” அவள் சொல்ல திரும்ப கோபம் வந்தது அவனுக்கு. ஆனாலும் அடக்கிக் கொண்டான்.

ஏனோ அவனை விட்டு தான் பிரிகிறேன் என்று அவள் சொன்னதை அவனால் ஏத்துக்கவே முடியல. மனது வலிச்சது. ஒரு பெருமூச்சோடு அவளைப் பார்த்தவன்,

“உன்ன திருமணம் செய்றதுக்கு முன்னாடி, ஒத்தையாதானே இருந்தேன். இனியும் இருப்பேன்...” சொன்னவன்,

“சரி அதை விடு... காலையில சரியா சாப்பிடல. வா சாப்பிட்டு புறப்படலாம்...” சொன்னவன் அவளை அழைத்துக் கொண்டு பக்கத்தில் இருந்த

உணவகத்துக்குச் சென்றான். இருவரும் சாப்பிட்டுவிட்டு வீட்டுக்குப் புறப்பட, அந்த நேரம் பார்த்து ஓடி வந்த குழந்தை ஒன்று நித்தியா மீது மோதியது.

அதை எதிர்பாராத நித்தியா பாலன்ஸ் தவறி தடுமாறி விழப் போக சட்டென்று அவளுடைய மார்பில் கரம் கொடுத்து அவளை விடாமல் காத்துக்கொண்டான் விமலநாதன்.

“சாரி ஆன்டி...” சொன்ன குழந்தை நிக்காமல் ஓடிவிட, அவளைத் தாங்கிக் கொண்ட விமலநாதனுக்குத்தான் மின்சாரம் தாக்கி உணர்வு.

அவனுடைய இடது உள்ளங்கை, மிகச் சரியாக அவளுடய வலது கலசத்தினை முழுதாகக் கவ்விப் பிடித்திருந்தது.

ஐந்து வருடங்களுக்குப் பிறகான பெண்மையின் மென்மையில் தடுமாறிப் போனான் விமலநாதன். அவனையும் மீறி அவனுடைய உள்ளங்கை அந்தக் கலசத்தின் அளவை எடைபோட, அவனையும் மீறி விரல்கள் மென்மையாக அதை அழுத்தி விட முயன்றது.

முதலில் நித்தியா அவன் பற்றிய இடத்தைக் கவனிக்கவில்லை. தானும் விழப்போகிறோம் என்று, தன்னை காப்பதற்காகக் குறுக்கே வந்த கரங்களை அவளும் அழுந்தப் பற்றிக்கொண்டதால், அவனுடைய கரம் மேலும் அழுத்தமாக அவளுடைய கனிகளின் மீது பட்டு விட்டது.

அவனுடைய உள்ளங்கையின் வெம்மையை உணர்ந்து கொண்ட செழித்த கூம்பகத்தில் ஒன்று அவளுடைய அனுமதியையும் வேண்டாது, சட்டென்று வீக்கம் கொள்ள, உணர்ச்சி மொட்டோ இறுகி விடைத்துக் கொண்டது. அதை அவனுடைய உள்ளங்கை உணர்ந்த நொடி, அவனுக்குள்ளும் பெருத்த ஆர்ப்பாட்டம்.

அதுநாள் வரை அடங்கிக் கிடந்த ஆண்மை, உயிர் பெற்று விடைத்துத் தன் இருப்பை அவனுக்குக் காட்ட மேலும் அதிர்ந்து போனான் விமலநாதன்.

இன்னும் கொஞ்சம் அழுத்திக் கொடுத்தால் என்ன என்று மனம் அவனை உந்தியது. பிறகுதான் தான் செய்யும் காரித்தை உணர்ந்தவனாக, பதறிப் போய் தன் கரத்தை நீக்கிக் கொள்ள, நித்தியாவும் அவனுடைய கரத்தைத் தள்ளிவிட்டு விலகி நின்று கொண்டாள்.

“சா... சாரி நித்தி... நா... நா வேணும்னு...” தடுமாறியவனுக்கு வியர்த்து விறுவிறுத்தது.

“இல்ல... பரவாயில்ல... புரியுது...” அவளும் சங்கடத்துடன் சொல்ல, அவனையும் மீறி பெருமூச்சொன்று வெளியே வந்தது. விழிகளளோ தன் கரம் தரிசித்த கனியின் மீது மோதி நின்றது.

அது எட்டாக் கனி ஆயிற்றே. சீ சீ இந்தப் பழம் புலிக்கும் நிலைதான் அவனதும்.

(6)

மீண்டும் நாட்கள் அதன் பாட்டிற்கு நகரத் தொடங்கியது.

விமலநாதன் நித்தியாவை நல்ல ஒரு காலேஜில் சேர்த்துவிட, அவளும் விட்ட படிப்பை தொடர்ந்தாள்.

விமலநாதன் வேலைக்குப் போக முதல் அவளை அழைத்துக் கொண்டு கல்லூரியில் விட்டுவிட்டுச் செல்வான். திரும்பி வரும் போது அழைத்து வருவான். இருவரும் பேசியவாறே இரவு உணவை முடித்துக் கொள்வார்கள். கொஞ்ச நேரம் டிவி பார்ப்பார்கள். அதன் பின் குட் நைட் சொல்லி தங்கள் அறைக்குள் புகுந்து கொள்வார்கள். மறு நாள் அப்பயே விடியும். காலை சாப்பாடு முடிய அவள் காலேஜ் போவாள். இவன் வேலைக்குப் போவான். மாலை வரும் போது அழைத்து வருவான்.

இப்படியே நாட்கள் பயணிக்க, மெல்ல மெல்ல நித்தியா விமலநாதனின் இதயக் கதவைத் தட்டத் தொடங்கினாள்.

ஆம், விமலநாதன் கொஞ்சம் கொஞ்சமாக நித்தியாவைத் தன் மனைவியாக ஏற்றக்கொள்ள ஆரம்பித்தான். அதுவும் மார்பில் அவன் கட்டிய தாலி உரச, அவள் நடந்து வரும்போதெல்லாம், இவள் என்னவள் என்கிற உரிமை அவனுக்குள் ஆதிக்கம் செலுத்தும்.

இதுதான் மஞ்சள் கயித்து மாஜிக் என்பார்களோ. அவனுக்கும் அந்த உரிமை பிடித்திருந்தது. அதே போல அவளும் அவனை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று ஆசைப்பட ஆரம்பித்தான் விமலநாதன். ஆனால் அவளோ பழைய காதலை மறப்பதாக இல்லை.

அந்த சத்தியனை எப்படி அவள் மனதில் இருந்து விரட்டுவது? நிறையக் கேள்வி அவனுக்குள்.

இப்படியே இருந்தால் வேலைக்கு ஆகாது. ஏதாவது செய்யணும். ஆனால் என்ன செய்வது? குழம்பியவன், அவள் மனதில் தான் நிலைத்து இருக்க வேண்டும் என்றால், அவளுடைய மனசில் தான் பதியிறது போல எதையாவது செய்யணும் என்று முடிவு செய்தான் விமலநாதன்.

அதற்காக, ஒரு நாள் அவளைக் கடைக்கு அழைத்துச்

சென்றான் விமலநாதன்.

அங்கே அவள் ஆசைப்பட்டது அனைத்தையும் வாங்கச் சொல்லி அவன் சொல்ல, முகம் மலர்ந்து போனாள் நித்தியா.

குதுகலமாகவே தனக்குப் பிடித்தது எல்லாம் வாங்க, அவனோ எதற்கும் தடை சொல்லவில்லை. அவள் மகிழ்ச்சியையே மன நிறைவோடு அவன் பார்த்துக் கொண்டிருந்தான்.

நித்தியாவுக்கோ மகிழ்ச்சி பிடிபடவில்லை. இதுவரை யாரும் அவளை இப்படி கடைக்கு அழைத்துச் சென்று பிடித்ததை வாங்க என்று அனுமதி கொடுத்ததில்லை. தாய் தந்தை என்னதான் அவள் ஆசைப்பட்டது வாங்கிக் கொடுத்தாலும், அதற்கும் ஒரு கட்டுப்பாடு இருந்தது.

சத்தியன் இப்படியெல்லாம் அவளுக்கு பெரிதாக எதுவும் வாங்கிக் கொடுத்ததில்லை. வாங்கிக் கொடுப்பதற்கு அவனுக்கு வசதியும் இருக்கவில்லை. ஆனால் இவன் இப்படி எந்தத் தடையும் கூறாமல் அவள் ஆசைப் பட்டதை எல்லாம் வாங்கிக் குவிக்க மகிழ்ந்து போனாள் நித்தியா.

ஆசைப் பட்டு எடுத்து வந்த சுரிதார் எல்லாம் அவனுக்கு போட்டுக் காட்டி,

“இது நல்லா இருக்கா மாமா... இது எப்படி இருக்கு... இது ஓகேவா?” என்று அவனிடம் கேட்டு, அவனுடைய அபிப்பிராயத்தைக் கேட்டு அவள் தேர்ந்தெடுக்க, விமலநாதனுக்கு பிடித்திருக்க, சந்தோஷமாகவே அவள் தேர்வில் பங்கு கொண்டான்.

கடைசியாக விமலநாதனின் காதை நெருங்கியவள்,

“மாமா...”

“என்ன நித்திமா...”

“அது வந்து..”

“சொல்லுடி...”

“இன்னர் வாங்கணும்...” தடுமாறியவாறு அவள் சொல்ல, உடனே அந்த செக்ஷனுக்கு அழைத்துச் சேன்றான் விமலநாதன்.

அவள் பார்த்துப் பார்த்து வாங்கியதைக் கண்டவனுக்கு அது அவளுக்கு எப்படி இருக்கும் என்று கற்பனையில் நினைக்க, ஆண்மை வீக்கம் கொண்டு பெருத்த வலி எடுத்தது.

அதுவும் அங்கே நிறைய மாடல் இன்னர்ஸ் எல்லாம் இருந்தது. அதில் லேஸ் பதித்த இன்னர்சைக் கண்டவனுக்கு சரிதாவின் நினைவு வந்தது.

இப்படிலாம் வாங்கி சரிதாவைப் போடவைத்து அழகு பார்க்கவேண்டும் என்று அவன் ஆசைப்பட்டான். ஆனால் கடைசி வரை சரிதா அதற்கு சம்மதிக்கவில்லை. இப்போது இதை வாங்கி நித்தியாவைப் போடவைத்து, அழகு பார்க்கும் ஆசை வந்தது. எல்லாம் பிலே பாய் மகசினால் வந்த சிக்கல்.

ஆம்பளை மனசு எங்கே பொண்ணுங்களுக்கு புரிய போகுது. ஏக்கப் பெருமூச்சோடு, நித்தியா வாங்குவதைப் பார்த்தான் விமலநாதன்.

எல்லாம் அறுதப் பழசு. எரிச்சல் வந்தது அவனுக்கு. அவள் வயசுக்கு மார்டனா வாங்கிப் போட்டா நல்லா இருக்கும். கற்பனைக் குதிரை வேகமாக ஓடியது.

“மாமா... வாங்கியாச்சு. போகலாமா?” அவள் இவனை உசுப்பும் வரைக்கும் கற்பனையில்தான் இருந்தான் விமலநாதன்.

இப்படி நித்தியாவைத் தன் வசம் இழுக்க விமலநாதன் பல வழிகளைக் கையாண்டான்.

இந்த காலகட்டத்தில் விமலநாதன் நித்தியாவைக் காதலிக்க ஆரம்பித்து விட்டான்.

அவளுடைய மார்பில் ஆடும் தாலியைப் பார்க்கும் போதெல்லாம், இவள் என்னவள் என்கிற உரிமை அவனை ஆட்டிப் படைக்க, அந்த உரிமை காதலாக மாறி, இதயத்தில் வுற்றிருந்த சரிதாவை ஓரம் தள்ளிவிட்டு அங்கே நித்தியா ஏறி அமர்ந்து விட்டிருந்தாள்.

அவள் நடந்தால், சிரித்தால், பேசினால் என்று அவள் என்ன செய்தாலும் அவனுக்கு ரசிக்கத் தோன்றியது. கூடவே அவளுக்காக அவனுடைய உடலும் மனதும் ஏங்க ஆரம்பித்தது.

இதில் அவள் குலுங்கிச் சிரித்தாளோ, துள்ளினாலோ, இறுக்கமான சுரிதார் அணிந்தாலோ இவன் நிலைதான் பரிதாபமாகிப் போகும். அதுவரை அடங்கிக் கிடக்கும் ஆண்மை, காட்டுக்கு ராஜாவாக சிலிர்த்துக் கொள்ளும். தனக்கு இணையான மாணை வேட்டையாடத் துடிக்கும்.

கொஞ்சம் கொஞ்சமாகத் தான் அவளுடைய கணவன் என்று உணர ஆரம்பித்தவனுக்கு அதை எப்படி அவளுக்குப் புரிய வைப்பது என்று தெரியாமல் விழி பிதுங்கினான்.

இரவில் தூக்கம் இன்றித் தவித்தான். பேசாமல் அவள் அறைக்குச் சென்று நிலையைச் சொல்லி அவளை எடுத்துக்கலாமா என்று கூட வெட்கமின்றி நினைத்தான். ஆனால் அப்படிச் செய்தால், அவன் மீது அவள் வைத்திருக்கும் நம்பிக்கை முழுசா கெட்டடிடுமே. அப்புறம் முதலுக்கே மோசமாயிரும்.

சே... இது என்ன கொடுமை. இளமை வேகம் முடிஞ்சிருச்சுன்னு நினைத்திருந்த நேரத்தில், அது காட்டாற்று வெள்ளமாக உருவாகி அவனையே அடித்துச் செல்லத் தயாராக இருந்தது விரகதாபம்.

விமலநாதனுக்கு அவனுடைய முதல் திருமண வாழ்க்கை ஒன்றும் அத்தனை திருப்திகரமானதாக இருக்கவில்லை. காதலித்துதான் மணந்து கொண்டான். காதலித்த காலத்தில் கூட சரிதா அவனைப் பெரிதாகத் தொட விட்டதில்லை. சொல்லப்போனால் முத்தத்திற்கே பஞ்சம் என்கிற நிலை. இவன்தான் கெஞ்சி கொஞ்சி என்று அவள் எதிர்க்க முதல் அங்கும் இங்குமாகக் கைவைப்பான்.

அவளும் பாவம் பார்த்து கொஞ்சமாக விட்டுக் கொடுப்பாள். அவனுடைய தொடுகை எல்லாம் இடைக்கு மேலேதான். கீழே, ம்கூம்... விரல் நுனி கூட நுழையக் கூடாது.

கிடைத்த வரைக்கும் லாபம் என்று அந்த நேரத்தை தனதாக்கிக் கொள்வான். அதையும் மீறி எதையாவது இவன் பண்ண முயன்றால், சரிதா கோபத்தில் முறைத்துக் கொண்டு போய் விடுவாள்.

அதற்குப் பிறகு அவளைத் தாஜா பண்ணி பழைய நிலைக்குக் கொண்டு வருவதற்குள் இவனுக்குப் போதும் போதும் என்றாகிவிடும்.

கிணற்று மீனை வெள்ளமா அடித்துப் போகப் போகிறது என்று திருமணம் வரைக்கும் பொறுமை காத்தான் விமலாதன்.

இதை எல்லாம் சேர்த்து, வட்டியும் முதலுமாகச் சேர்த்து மொத்தமாக முதலிரவில் காட்டிவிட அரண்டு போனாள் சரிதா.

அவனுடைய அசுர வேகம் தாங்க முடியாமல் இரண்டு நாட்கள் நடக்க முடியாமல் திண்டாடினாள் சரிதா.

அவனுடைய அந்த வேகத்திற்கு அவளால் ஈடு கொடுக்க முடியவில்லை. அதனால் ஒரு வாரம் அவனைத் தொடவே விடவில்லை. இவன் கெஞ்சி கொஞ்சி மிஞ்சி என்று முதல் முறை அனுபவித்த சுகத்தை திரும்ப

அனுபவிக்க ஆசைப்பட்டவனுக்கு ஒரு வாரம் கழித்துத்தான் அந்த சுகம் திரும்பக் கிடைத்தது.

அதுவும் நிறைய கட்டுப்பாட்டோடு.

இறுக்கி பிடிக்காதீங்க. அழுத்தாதீங்க. சாஃப்ட்டா உள்ள வாங்க. கடிக்காதீங்க. பலமா சப்பாதீங்க. லைட்டா தொட்டுக்கங்க. இப்படி நிறைய கண்டிஷன்ஸ். இதை விட தொடாமலே இருக்கலாம்னு தோனும் விமலநாதனுக்கு.

ஆனாலும் இது கூட கிடைக்காமல் போயிடுமோ என்கிற பயத்தில், தன்னை அடக்கி, தன் வேகத்தைக் குறைத்து கொஞ்சம் மென்மையாக அவளைக் கையாண்டாலும், அது கூட ரஃப் என்று திட்டினாள் சரிதா.

இவனுக்குத்தான் முழுத் திருப்தி கிடைக்காத நிலை.

விமலநாதனுக்கு குறைந்தது அரை மணி நேரமாவது கனிகளோடு விளையாடணும். அவள் உடலைத் தொடணும். பெண்மையை ரசிக்கணும். சுவைக்கணும். அதுக்கு பிறகு இரவு முழுக்க எடுத்துக்கணும். எந்த கட்டுப்பாடும் இல்லாம வேகமா பலமா செய்யணும். ஆனால் அதற்கு எதிர்மாறாக இருந்தாள் சரிதா.

ஆனாலும் கிடைத்தவரைக்கும் சந்தோஷம் என்று அவளை அனுபவித்தாலும், அவன் அவளை ரசித்து கொஞ்சும் அளவுக்கு சரிதா அவனைக் கொஞ்சவில்லை. அவள் கனிகளைச் சுவைக்க ஒரு நிமிடத்திற்கு மேல் அனுமதிக்க மாட்டாள். இவன்தான் விளையாட்டுப் பொருளைப் பறித்த குழந்தையாகப் பரிதாபமாக அவளைப் பார்ப்பான்.

பிறகுதான் தெரிந்தது, அவளுக்கு இதில் அந்தளவு நாட்டமில்லை என்று. இவன் ஆசைப்படுகிறான் என்பதற்காக உடலைக் கொடுத்துவிட்டு விழிகள் மூடி உணர்ச்சிகள் அற்றுக் கிடப்பாள். இவன் என்ன செய்தாலும் அவளிடம் எந்த எதிர்வினையும் கிடைக்காது.

“என்னடி... உணற்சியே இல்லாம இருக்கே... கொஞ்சம் ஒத்துழையேன்...” அந்த சுக வேதனையிலும் முனங்குவான்.

ஆனால் இவளோ பதில் சொல்லாது உதடுகளைக் கடித்து விழிகளை மூடி அவன் இயங்குவதற்கு வழி விட்டு நிற்பாள்.

கோபம்தான் வரும் அவனுக்கு.

“அசைஞ்சு கொடுடி. எத்து... முழுசா வாங்கிக்கோ...” இப்படி இவன் அரட்டினாலும் அவள் காது கேட்காதது

போல அப்படியே கிடப்பாள். ஒரு முறை செய்த பின், ஆசையே விட்டுப் போகும்.

கற்பனையில் விடிய விடிய மனைவியோடு உறவு கொள்ள வேண்டும் என்கிற ஆசை நிராசையாகிப் போனது. ஒரு முறைக்கே களைத்துப் போய் சோர்ந்து போய்க் கிடக்கும் மனையாளிடம் என்னத்தை எதிர்பார்ப்பது?

“ஏய்... கொஞ்சம் அசையேன்... இதை தொட்டு பாக்கிறியா... டேஸ்ட் பண்றியா... இதை கொஞ்சம் பலமா கசக்கவாடி... கொஞ்சம் வேகமா பண்ணவா... கொஞ்சமா கடிச்சுக்கறேன்டி... அள்ளிக் கெடுடி...” ஒவ்வொன்றுக்கும் அனுமதி கேட்டால் அவளிடமிருந்து பலதில் வேணாம்னுதான் வரும். புது மனைவி பயமுறுத்தக் கூடாது என்று அடக்கிக் கொள்வான். ஆனால் வருடம் போன பின்னும் அவளிடம் மாற்றமில்லை.

இப்படியே இரண்டு வருடங்கள் கடந்து போனது. அந்த இரண்டு வருடங்களிலும் அவர்களுக்கு இடைய நடக்கும் தாம்பத்திய உறவு மெல்ல மெல்ல குறையத் தொடங்கியது. முன்பே வாரத்திற்கு இரண்டு முறை என்றிருந்தது மாதம் செல்லச் செல்ல, வாரத்துக்கு ஒரு முறை, மாதத்திற்கு ஒரு முறை, என்றானது. அதற்குப் பிறகுதான் அவளுக்கு புற்றுநோய் இருப்பதே தெரிய வந்தது.

சிகிச்சை கொடுத்தும் அவளை உயிரோடு வைத்திருக்க முடியவில்லை. சொல்லப்போனால் திருமணமாகியும் கிட்டத்தட்ட சன்னியாசியாகத்தான் இருந்தான்.

மனைவி இறந்த பிறகு அந்த உணர்ச்சிகள் எல்லாம் ஒரு கட்டுக்கு வந்திருந்தது. அடக்கி ஆளவும் பழகிக் கொண்டான்.

ஆனால் இப்போது, இளமை பொங்க ஒருத்தி அவன் கையால் தாலி வாங்கிக்கொண்டு அவன் கூடவே வாழும் போது அவனால் ஆசையை அடக்கி வைத்திருக்க முடியவில்லை.

சரிதாவிடம் எதிர்பார்த்த அனைத்தையும் அவளிடமும் எதிர் பார்க்க ஆரம்பித்தான் விமலநாதன்.

ஆனால் அதற்கு அவள் சம்மதிக்கவேண்டுமே.

சம்மதிப்பாளா. அவன் ஆசைக்குத் தீனியாக அவள் கிடைப்பாளா?

(7)

அன்று வேலை முடித்து வீட்டிற்கு வந்தான் விமலநாதன்.

நித்தியா சோபாவில் சரிந்து படுத்து ஏதோ புத்தகம் ஒன்றைப் படித்துக் கொண்டிருந்தாள்.

அவளுக்கு இப்போது விடுமுறை. அதனால் ஓய்வாக இருந்தாள் நித்தியா.

விமலநாதன் வரும் சத்தம் கேட்டு எழுந்தவள் மகிழ்ச்சியாக அவனை நோக்கி ஓடி வந்தாள்.

நீண்ட நாட்களுக்குப் பிறகு அவள் முகத்தில் இருந்த பூரிப்பைக் கண்டு விமலநாதன் வியந்தாலும், அவன் பார்வை என்னவோ அவளுடைய கழுத்துக்குக் கீழேதான் இருந்தது.

அவள் அணிந்திருந்த சுரிதார் அவளுக்கு கொஞ்சம் டைட் போல. இங்கே வந்த இந்த ஆறு மாதங்களில் அவள் கொஞ்சம் உடம்பு வைத்திருந்தாள். அதன் விளைவாக அவளுடைய திமில்கள் இரண்டும் ஷால் போடாததால் கண்ணுக்கு விருந்தாக கும் என்று நிற்க, வந்தவனுக்கு பூஸ்ட் குடித்த உணர்வு. அதுவும் அவள் துள்ளி வந்ததில் அவை உள்ளே குலுங்க, எச்சில் ஊறியது. கரங்களோ பரபரத்தது. அப்படியே சென்று, அவற்றை அழுத்திக் கொடுத்து அதன் டெக்ஷரை அறியும் ஆர்வம் வந்தது. ஆனால் முடியாதே.

பெருமூச்சுடன் அவளை ஏறிட்டு,

“என்ன... இன்னிக்கு வரவேற்பு ரொம்ப பலமா இருக்கு...? என்றான் விட்டேத்தியாக.

உடம்பு அவசரமாக அவள் அணைப்புக்கு ஏங்கியது. அதை நிறைவேற்ற முடியாத கோபத்தில் எரிச்சலும் வந்தது.

“அத்தை எடுத்திருந்தாங்க மாமா... உங்களை கூப்பிட்டாங்களாம். நீங்க எடுக்கலைன்னதும் வீட்டுக்கு எடுத்தாங்க...”

“ஓ... மீட்டிங்ல இருந்தேன். எதுக்கு எடுத்தாங்க?”

“அதுவா... அவங்க இங்க வரப்போறாங்களாம்...” குதுகலமாகச் சொல்ல, அவளை யோசனையுடன்

பார்த்தான் விமலநாதன்.

“இங்கே வர்ராங்களா... எதுக்கு இப்ப வர்ராங்க. நீ என்ன சொன்னே?” என்றான் கூர்மையாக.

“ஐயோ... எனக்கு சந்தோஷம் தாங்க முடியல தெரியுமா... உடனே வாங்கன்னு சொல்லிட்டேன்...” சொன்னவளைக் கோபமாகப் பார்த்தான் விமலநாதன்.

“எதுக்கு அப்படி சொன்னே...?” சொன்னவனைக் குழப்பமாகப் பார்த்தாள் நித்தியா.

தான் சொன்னதும் சந்தோஷத்தில மகிழ்வான்னு பார்த்தா, ஏன் சொன்னேன்னு கேக்கிறானே.

“ஏன்? என்னாச்சு மாமா...? அத்தை வர்ரது உங்களுக்கு புடிக்கலையா?” என்றாள் கவலையாக.

“ப்ச்... அம்மா வர்ரதில எனக்கு சந்தோஷம்தான் நித்திமா... ஆனால்...” அவன் தயங்க,

“என்ன மாமா... எதுக்கு தயங்குறீங்க...?” என்றாள் குழப்பமாக.

“இல்ல... அம்மா இங்க வந்தா நாம நிறைய அட்ஜஸ்ட் பண்ணவேண்டி வரும். அது உனக்கு சிக்கலாயிரும்...” இவன் சொல்ல புரியாமல் அவனைப் பார்த்தாள் நித்தியா.

“ஏன் சிக்கலாயிடும்? நாம அப்படி என்ன அட்ஜஸ்ட் பண்ணனும்? அத்தை வந்தா நல்லாதானே இருக்கும். எனக்கு வேறு இப்ப காலேஜ் இல்ல. அவங்க வந்தா எனக்கு செமையா பொழுது போயிரும்ல... எத்தனை நாளாச்சு அத்தைய பாத்து...” அவள் சொல்ல,

“அதில்லை நித்திமா... அம்மா இங்க வந்தாங்கன்னா, நாம தனித் தனி அறையில படுக்க முடியாது... என்னோட அறையிலதான் நீ தங்கிக்கணும்... உன்னால அது முடியுமா? அது புரியாம நீ அம்மாவை வரச் சொல்லியிருக்கே... இரு நான் அவங்க கிட்ட பேசி வரவேணாம்னு சொல்றேன்...” அவன் சொல்ல, உடனே தடுத்தாள் நித்தியா.

“அதனால என்ன மாமா... கொஞ்ச நாளைக்கு தானே. நான் உங்க கூட தங்கிக்கறேன்...” அவள் சொல்ல அதிர்ந்து போனான் விமலநாதன்.

பழம் நழுவித் தானா பாலில் விழுந்தால் எப்படி இருக்கும். அப்படி உணர்ந்தான் அவன்.

“என்ன சொல்றே நீ... உனக்கு ஓகேவா என் கூடத் தங்க..?”

“ப்ச்.. இதில என்ன மாமா இருக்கு... ஒரே வீட்ல பத்து மாசமா இருக்கோம். ஒரே அறையில தங்கிறதுக்கு என்ன? நா அட்ஜஸ்ட் பண்ணிக்கறேன்...” அவள் சொல்ல, மகிழ்ந்தான் விமலநாதன்.

இத்தனை நாளும் தனித் தனியாக உறங்கியவர்கள், ஒரே அறையில் படுப்பதென்றால், ஏதேதோ கற்பனை எழுந்தது அவனுக்கு.

அடச் சே... கட்டிய மனைவியை இப்படி ஏக்கத்தோடு நினைப்பது உலகத்தில் அவன் ஒருத்தனாகத்தான் இருக்கும்.

“அப்புறம் நித்திமா அம்மா இங்க வர்ரதே நாம எப்படி இருக்கோம்னு பாக்கத்தான்...”

“ஏன் நாம நல்லாதானே இருக்கோம்...”

“அது இல்லடி... நாம சந்தோஷமா இருக்கோம்னா... புருஷன் பொண்டாட்டியா அன்னியோன்யமா இருக்கோமான்னு பாக்கத்தான் வர்ராங்க... அதனால...”

“அதனால...”

“அவங்களுக்கு முன்னாடி நாம ஒத்துமையா இருக்கோம்னு காட்டிக்கணும். அது உன்னால முடியுமா?” அவன் சொல்ல, யோசித்தாள் நித்தியா.

அவளுடைய முகமோ அதீத சுகத்தில் கசங்கிப் போனது. உதடுகள் துடித்தன. அதைப் பற்களால் கடித்து அடக்க முயல, அதைக் கண்டவன் சட்டென்று குனிந்து அவள் பற்களில் சிக்கிக் கிடந்த உதடுகளை விடுவித்து அதற்குப் பதிலாகத் தன் உதட்டைக் கொடுத்து நாக்கை உள்ளே நுழைக்க, நடுங்கினாள் நித்தியா.

அவனுடைய உதடுகள் அவளுடைய உதடுகளை இழுத்து இழுத்துச் சப்ப, ஒரு கரம் அவளுடைய ஒற்றைக் கனியை அழுத்திக் கொடுத்து நசிக்க, மறு கரம், மாணிக்கக் கல்லைக் கசக்கி உருட்டிக் கொண்டிருந்தது.

இப்படி முழ்முனை தாக்குதலால் அவளுக்கு சித்திரவதை செய்தவன், அவளுடைய நாக்கை இழுத்துச் சப்பியவாறு தன் நடுவிரலை அவளுடைய புதை குழிக்குள் நுழைக்கத் துடித்தாள் நித்தியா.

“ம்...ஹ... ஷ்...” அவள் முனங்க, அந்த சத்தத்தை உறிஞ்சி எடுத்து விழுங்கிக் கொண்டான் விமலநாதன்.

பின் கீழே வந்தவன், அவன் விரல்களை நுழைத்து எடுக்கும் போது குலுங்கி ஆசைந்த கனியில் ஒன்றை வாயில் எடுத்துப் பலமாகச் சப்பிக் கடிக்க, மேலும் துடித்தாள் நித்தியா.

“ஆஆஆஆம்... ஷ்...” என்று அவள் தவிக்க அதை ரசித்துப் பார்த்தவனின் கரத்தின் வேகம் அதிகரிக்க, உதடுகளைக் கடித்தவள், இன்ப வேதனை தாங்க முடியாமல் அவன் உதடுகள் படாத கனியைத் தன் கரத்தில் எடுத்துக் கசக்கிக் கொடுக்க, அவள் கசக்கிய கனியைத் தன் வாயில் எடுத்துக் கொண்டான் விமலநாதன். சற்று நேரம் அவளை இன்ப வதை செய்ய அதற்கு மேல் தாக்குப் பிடிக்க முடியாமல் வெடித்துச் சிதறினாள் நித்தியா.

காட்டாற்று வெள்ளமாக, மதனநீர் விமலநாதனின் கரங்களை நனைக்க, உள்சுவர் விரிந்து சுருங்க அவள் உச்சம் கண்டுவிட்டாள் என்பதைப் புரிந்து கொண்டான் விமலநாதன்.

அந்த மகரந்தத் தேனைச் சுவைக்கும் ஆசையில் சட்டென்று அவளுடைய கால்களுக்கு மத்தியில் வந்தமர்ந்தவன், அவளுடைய கால்களை மடக்கி விரிக்க அவனுக்காக விழிகளைத் திறந்தது அழகிய நந்தவனத் தோட்டம்.

அந்த மங்கிய வெளிச்சத்திலும் கச்சிதமாகத் தெரிந்த அந்த அழகிய பூவைக் கண்டவன் சொக்கித்தான் போனான்.

ஆசையோடு சற்றுப் பிளந்திருந்த பூ இதழ்களை விரிக்க, அவனைப் பார்த்துக் கண் சிமிட்டியது சென்னிற மாணிக்கக் கல்.

பித்தானான் விமலநாதன்.

குனிந்தவன் உதடுகளைக் குவித்து அந்த மாணிக்கக் கல்லை உறிஞ்சி எடுக்க, நெஞ்சை நிமிர்த்தித் துடித்தாள் நித்தியா.

அவனோ அள்ளி எடுத்து உறிஞ்சியிவிட்டுப் பின் பற்களால் கடித்து இழுத்தான். பின் சற்றுக் கீழிறங்கி நாவால் அந்தப் பெண்மையின் நீளத்தைத் துடைத்து எடுத்தான். சிந்திக் கொண்டிருந்த தேனை உறிஞ்சி எடுத்துச் சுவைத்தான்.

நாவோ அவள் பெண்மையின் வெடிப்பில் நுழைந்து, தேன் சிந்தும் மலரிட்குள் நுழைந்து அந்த சுவை மிக்க தேனை அள்ளி எடுத்துச் சப்புக் கொட்டிக் குடிக்க, நித்தியாவின் கால்களோ நடுங்கின.

இவனுக்கும் ஆண்மை வெடித்துவிடும் நிலைக்குத் தள்ளப்பட்டிருந்தது. முதலில் வலிக்கும் அவன் ஆண்மைக்கு விடுதலை கொடுக்க வேண்டும். அதற்குப் பிறகுதான் ஆர அமர அவளை ரசித்து செய்யணும்.

முடிவு செய்தவன், லுங்கியைக் கழற்றி எறிந்து விட்டு, ஆசையோடு குனிந்து அவளுடைய தொடைகளை முத்தமிட்டுக் கடித்தவன் நாவால் வருடிக் கொடுத்தவாறு கொஞ்சம் கொஞ்சமாகப் பெண்மையை நோக்கி நகர, நித்தியா கால்களை ஒடுக்க முயன்றாள்.

ஆனால் இவன் கால்ளைப் பிரித்து வைக்க, சங்குப் பூ அவனுக்காகவே விரிந்து கொண்டது. அதன் அளவு அவனை யோசிக்க வைத்தது. ரொம்ப குட்டியா இருக்கே. அவனோட எட்டங்குல கஜகோலை அது ஏத்துக்குமா? சந்தேகம் வந்தது.

முயன்று பார்க்காமல் முடிவு செய்ய முடியாது. முயன்று பார்த்து விடுவது. ஆவேசத்தோடு அடங்காது ஆடிக் கிடந்த தன் கஜகோலைப் பற்றி சரியாக அதன் ஜோடியிடம் வைத்து பலமாக ஒரு அழுத்து அழுத்த, பெண்மையின் சுவரைக் கிழித்துக் கொண்டு உள்ளே நுழைந்தது அவனுடைய பருத்த கஜகோல்.

துடித்துப் போனாள் நித்தியா.

“ஆஆஆஆவ்...” அவள் அலற, அவள் அலறிய சத்தம் வெளியே போகாதவாறு தன் உதடுகளால் அழுந்த மூடி, அந்த சத்தத்தை விழுங்கிக் கொண்டான் விமலநாதன்.

“ம்... கொல்றேடி...” சென்னவன், இப்போது அவளுடைய உதடுகளை உறிஞ்சி எடுத்தான். கடித்தான். இழுத்துச் சப்பினான். அவளுடைய மேல் உதடுகளை மென்றான். கீழ் உதட்டை கடித்த்தான். தன் நாக்கை உள்ளே விட்டு அவளுடைய நாக்கை வரிந்து அணைத்தான். தட்டினான். அவள் நாக்கை இழுத்து வைத்து சப்பினான்.

அதே நேரம் அவனுடைய கரங்கள் அவளுடைய தேகம் முழுக்க அளைந்தன. கைக்கு சிக்கிய இளம் பந்துகளைப் பற்றிக் கசக்கி எடுத்தன. உருவின. அதன் முனை கண்டு நசித்துக் கசக்கின. அதே நேரம் அவனுடைய இடையோ ஆவேசத்துடன் அவளுக்குள் நுழைவதும் வெளிவருவதுமாக ஆட்டம் காட்டியது.

நீண்ட நேரம் தன் எச்சிலை அமிர்தமாக அவளுக்குள் திணித்து அவள் அமிர்தத்தை உறிஞ்சிக் குடித்தவன், ஆசை அடங்காதவனா அந்த உதடுகளை விடுவித்துக் கன்னத்தைக் கடித்தான். அப்படியே கீழிறங்கி நாடியை வலிக்காமல் கடித்தான். கழுத்தில் முகத்தைப் புதைத்து சப்பினான்.

அதன் பிறகு அவளுடைய கனி ஒன்றைப் பற்றித் தூக்கி அதைச் சப்பி எடுத்தான். கூடவே தன் ஆண்மையை வெளியே எடுத்து மீண்டும் பலமாக ஒரு தள்ளுத் தள்ள. அவனுடைய ஆண்மையை முழுசாக வாங்கிக் கொண்டது அவளுடைய பெண்மை.

திணறிப்போனாள் நித்தியா. அதையும் மீறி அவனுடைய ஆண்மை அவளுடைய பெண்மையைத் தீண்டித் தீண்டித் தீ மூட்டத் துடித்தாள்.

அவனோ தன் ஆண்மையை உள்ளுக்குள்ளே வைத்து வட்டமடித்தான். தேய்த்தான். உராய்ந்து கொடுத்தான். எம்பித் தள்ளினான். திரும்ப வெளியே எடுத்துத் தள்ளினான். பின் சீற்றமாக அவளுக்குள் அசைந்தான். கரங்களோ, அவளுடைய கனிகளைக் கசக்கிக் கொடுக்க, உதடுகளோ அவளை முத்தமிட்டது. ஒற்றை முலையைக் கடித்துச் சப்பினான்.

ஒரு கட்டத்தில் நித்தியாவால் தாக்குப் பிடிக்க முடியவில்லை.

“ஆஆஆஆ... அம்மா... முடியல...” அவள் கதற, அவனோ எம்பி எம்பி அவளுக்குள் நுழைய, மீண்டும் வெடித்துச் சிதறினாள் நித்தியா. இப்போது வந்த உச்சம்

முன்னையதை விடப் பல மடங்கு அதிகமாக இருக்க மூச்சடைத்து மயங்கிப் போகும் நிலைக்குத் தள்ளப்பட்டவளாக, பெரிய பெரிய மூச்சுகளாக எடுத்து விட்டாள்.

விமலநாதனோ இடை விடாமல் அவளுக்குள் தொடர்ந்து அசைய, அவன் அடிவயிற்றிலிருந்து பொங்கிய உணர்ச்சிப் பெருக்கு, ஆண்மை வழியாக வெடித்துச் சிதறி வெண் குறுதியாக அவளுடைய கர்ப்ப வாசலைச் சென்றடைய, அப்படியே ஓய்ந்து போய் அவளுடைய நெஞ்சின் மீது விழுந்தான் விமலநாதன்.

உதடுகளோ ஆசையோடு ஒற்றைக் கனியை அள்ளி எடுத்துச் சப்பத் தொடங்கியது.

(13)

விமலநாதனுக்கு அவளை விட்டு விலகவே முடிந்திருக்கவில்லை. உயிர் குருதியைக் கக்கிய பின்னும், நீட்டி நிமிர்ந்து அவளுக்குள் கிடந்த ஆண்மையை உணர்ந்து வியந்தான் விமலநாதன்.

நிமிர்ந்து நித்தியாவைப் பார்க்க அவளோ களைத்து ஓய்ந்து கிடந்தாள்.

ஆசையோடு அவள் தேகம் எங்கும் கரங்களால் வருடிக் கொடுத்தவன், அவன் வாயில் சிக்கிப் படாத பாடு பட்டு நொந்து நூடுல்சாகப் போயிருந்த கனியைப் பற்றிக் கசக்கினான்.

அப்படியே குனிந்து அவளுடைய உதடுகளில் முத்தமிட, நித்தியா மறுக்காமல் அவனுடைய உதடுகளைத் தன் உதடுகளால் கவ்விக் கொண்டாள். மீண்டும் உணர்ச்சி பெருக்கெடுத்து ஓடியது விமலநாதனுக்கு.

“ம்... ம்ஹூம்... ம்...” அவளுடைய இன்ப முணங்கலைக் கேட்டவாறு அவளுடைய உதடுகளைச் சப்பி எடுத்தவன், தன் எச்சிலை அவளுக்குக் கடத்திவிட்டு அவளுடைய எச்சிலை அள்ளி எடுத்துச் சுவைத்தான். மீண்டும் தன் கவனத்தைக் கனிகளிடம் கொண்டு வந்தான்.

அவனுடைய அயரா உழைப்பால் கொஞ்சம் தொய்ந்து இளப்பாறியிருந்தன அவளுடைய கனிகள்.

இரண்டையும் கரங்களால் அள்ளி எடுத்துக் கசக்கியவன், திரும்ப அவளுக்கு மேல் படர்ந்தான்.

இப்போது நித்தியாவின் விழிகள் விரிந்திருந்தன. அவனைத்தான் இமைக்காமல் பார்த்தவாறு இருந்தாள் நித்தியா. குனிந்தவன் அவளுயைட கண்களில் முத்தமிட்டு விலகினான். மூக்கைக் கடித்தான். உதடுகளை மீண்டும் சப்பினான். பின் அவளை அள்ளி அணைத்தவாறு உருண்டு படுக்க இப்போது அவன் கீழும் அவள் மேலுமாக இருந்தார்கள்.

வியப்பில் விரிந்தன நித்தியாவின் விழிகள்.

தன் கண் முன்னால் தொங்கிக் கொண்டிருந்த கனிகளை ஆசையோடு பார்த்தவன் அவற்றை வருடிக் கொடுத்து அள்ளி எடுத்து தொங்க விட்டான். அவனுடைய அந்த

செய்கையில் குலுங்கி அடங்க, அதன் அழகில் மெய் மறந்து ஒற்றைக் கனியில் மெல்லியதாய் ஒரு அடி கொடுக்க, திரும்பவும் ஆடி அடங்கியது அவளுடைய தொங்கு தோட்டம்.

இன்னும் விடாமல் கசக்கியவாறு மேலே தூக்கி விட, மீண்டும் தொங்கி ஆடியது அவளுடைய அழகிய கனிக்கூட்டம்.

ஆசை அடங்காதவனாக, அவற்றைத் திரும்பவும் கசக்கிப் பிழிந்து விட்டு, அவளுடைய இடையைப் பற்றி,

“அசைஞ்சு கொடு நித்திமா...” என்றாள் முணங்கலாக.

அவளோ என்ன செய்வது என்று விழிக்க, அவள் இடையைப் பற்றி அசைத்துக் காட்டினான் விமலநாதன்.

அவள் எம்பி இறங்க, சட்டென்று வெளியே வந்துவிட்டிருந்தது அவனுடைய ஆண்மை.

அதைப் பற்றி, சரியாக அவள் பெண்மையில் வைத்து,

“உட்காரு நித்தி...” என்றான் திணறலாக. அவள் அவனுடைய ஆண்மையின் மீது அமர, சுலபமாக உள்ளே சென்றிருந்தது அவனுடைய ஆண்மை. அது கொடுத்த சுகம் தாங்க முடியாமல் அவளுடைய பிட்டத்தில் பலமாக ஒரு அறை கொடுத்தவன்,

“அசைடி...” என்றான் வெறிகொண்டவனாக.
நித்தியாவோ, அவன் ஆசைக்கு ஏற்ப அவனுக்கு மேல் அமர்ந்தவாறு சவாரி செய்யத் தொடங்கினாள்.

குலுங்கிய புறாக்களைக் கண்டு பித்தம் கொண்டவனாக, பசுமாட்டில் பால் கறப்பது போல அவளுடைய கனிகளை உருவி விட்டுக் கொள்ள, நித்தியாவுக்கோ, உடல் நடுங்கத் தொடங்கியது.

“ம்.... ஹ... ஷ்...” முனங்கியவள், இப்போது எம்பி எம்பி அவனுடைய ஆண்மையை உள்வாங்க, அவனுடைய ஆண்மை சரியாக அவளுடைய உணர்ச்சிப் பொட்டில் உரச, சீறலான மூச்சு வரத் தொடங்கியது நித்தியாவுக்கு.

அதை உணர்ந்த கொண்டவன், அவளைப் புரட்டிப் போட்டு இப்போது அவள் மீது படர்ந்து, மின்னல் வேகத்துடன் அசையத் தொடங்க, நித்தியாவுக்கு மூச்சு அடைத்தது.

“ஆஆஆஆம்... ஆஹ்... ஷ்... ஆஆஆஆஆஆ” என்று பலமாக அவள் அலறியவாறு உச்சம் கண்டு வெடிக்க, விமலநாதனோ தன் அசைவை நிறுத்தினானில்லை.

இன்னும் அவளுக்குள் பலமாக அசைந்தவன், ஒரு

தலையணையை எடுத்து அவளுடைய முதுகில் வைத்து அவளுடைய பெண்மையை உயசரச் செய்து பலமாக அவளுக்குள் தன்னைத் திணிக்க, புது சுகம் கிடைத்தது விமலநாதனுக்கு.

மீண்டும் அசுர வேகமாக அவளுக்குள் அசைந்தவன், கடைசியா சக்தி அணைத்தையும் சேர்த்து அவளுக்குள் உயிர் அணுக்கலாகச் செலுத்திவிட்டு ஓய்ந்து பொய் சரிந்தான் அவன்.

இருவருக்குமே களைப்பில் நெஞ்சம் ஏறி இறங்கியது.

இருவருக்கும் அந்த நேரம் மிக இதமாக இருந்தது. பேச எதுவும் தோணவில்லை.

ஆனால் விமலநாதனின் கரங்கள் மட்டும் அவளுடைய கனிகளைப் பிசைவதை மட்டும் விடவில்லை. அவளும் தடுக்கவில்லை.

மெதுவாக அவனுடைய ஆண்மை போராடிக் களைத்து அவளுடயை பெண்மையை விட்டு வெளியே வந்திருக்க, நித்தியாவுக்கோ நித்திரை கண்ணைச் சுழட்டியது.

அப்படியகே திரும்பிப் படுத்தவாறு உறங்கிப் போக, விமலநாதன் அவளை அணைத்தவாறு விழிகளை மூடிக்கொண்டான்.

மெதுவாக விழிகளைத் திறந்தாள் நித்தியா. அங்கே விமலநாதனின் அணைப்பில் கிடந்தவளுக்கு எதுவோ உறுத்தியது.

என்ன ஒரு மாதிரி இருக்கு? குழம்பியவளாக விமலநாதனை விட்டு விலக முயல, அவனோ அவளை மேலும் இழுத்துத் தன்னோடு அணைத்தவாறு இடையை அசைக்கத் தொடங்க, அதிர்ந்து போனாள்.

அவளைப் பின்பக்கமாக அணைத்தவாறு இருந்த விமலநாதனின் ஆண்மை அவளுடையபெண்மையை நிறைத்துக் கிடந்தது.

அதிர்ந்து போனாள் நித்தியா. அவளுக்கு கொஞ்ச நேரம் எதையும் தெளிவாகச் சிந்திக்கக் கூட முடியவில்லை.

ஏதோ கனவு போல அவளுடைய உடல் இன்பம் அனுபவித்தது நினைவுக்கு வந்தது. ஆனால் அது கனவு அல்ல, நிஜம் என்பது அப்போதுதான் அவளுக்குப் புரிந்தது. பதறியவளாக அவனிடமிருந்து விலக முயல, விமலநாதனோ அவளை இறுக அணைத்தவாறு அவளுக்குள் இயங்கிக்கொண்டிருந்தான்.

“மாமா... என்ன பண்றீங்க. விடங்க...” அவள் திணற,

“ஷ்... கொஞ்சம் பொறுத்துக்க... இதோ முடிச்சிடுறேன்...” சொன்னவனின் கரங்கள் மேலும் கீழும் அசைந்து அவளுடைய கனிகளைக் கசக்கின. இவளோ அவனுடைய கரங்களைத் தட்டிவிட முயல, கரத்தைக் கீழு இறக்கி வந்தவன், சங்குப் பூவில் கரங்களை நுளைத்து மாணிக்கக் கல்லை நசுக்கிக் கசக்க, சிலிர்த்தாள் நித்தியா.

“மாமா... வேணாம் மாமா... என்னை... ஹ... வி... ம்.. விடுங்க...” அழுகையும், உணர்ச்சிக் கொந்தளிப்பாகவும் அவள் சொல்ல,

“கொஞ்சம் பொறுத்துக்கடி... இதோ முடிஞ்சிரும். இடையில விட முடியாது... இருடி...” சொன்னவன் இப்போது அவளுக்குள் பலமாக அசைந்தவாளு அவளுடைய சங்குப் பூவைக் கசக்க, என்னதான் மறுத்தாலும் ஒரு கட்டத்திற்கு மேல் நித்தியாவாலும் மறுக்க முடியவில்லை.

அவன் அசைய அசைய. கரங்களோ அதற்கேற்ப அவள் மகரந்த மொட்டைக் கசக்கி உணரச்சி குவியும் இடத்தில் சுரண்ட அது கொடுத்த சுகத்தில் தன்னைக் கட்டுப்படுத்த முடியாமல் நித்தியா சீற்ற மூச்சோடு வெடித்துச் சிதற, பின்புறமாக இருந்து அவளுக்குள் அசைந்துகொண்டிருந்த விமலநாதன் அவளைக் குப்பிறப் போட்டு அவள் மிது படர்ந்து வேககம் கொண்டு அசைந்து, கடைசியாகத் தன் உயிர் அணுவை அவளுக்குள் சீறவிட்ட நேரம், அத்தனை பலத்தையும் கூட்டி அவனை ஒரு தள்ளுத் தள்ளிவிட்டு, படுக்கையை விட்டு எழுந்து நின்றாள் நித்தியா.

அப்போதுதான் தன் உடலில் பொட்டுத் துணி இல்லாமல் இருப்பதே அவளுக்குத் தெரிந்தது. அதிரந்து போனாள்.

தரையில் கிடந்த தன் சேலையை உருட்டி எடுத்து உடலைச் சுற்றியவள், அழுகையுடன் விமலநாதனைப் பார்த்தாள். அவனும் அவளைத்தான் பார்த்துக் கொண்டிருந்தான்.

மூனு முறை அவளை எடுத்தாச்சு. இன்னும் ஆசை அடங்கவில்லை அவனுக்கு.

“நித்திமா...” அவன் ஆசையாக அழைத்தவன்,

“இன்னொரு வாட்டி பண்ணலாமாடி?” போதை தெளியாமல் கேட்டான் அவன். இன்னும் அவனுக்கு அங்கே நடப்பது எதுவும் சரியாகப் புரியவில்லை.

“மாமா... என்ன பண்ணி வச்சிருக்கீங்க” கோபமும் அழுகையுமாகக் கேட்க, குழப்பத்தோடு எழுந்தான் விமலநாதன்.

ஆடையைத் துறந்த ஆண்மை நீட்டி நிமிர்ந்து அடுத்த ஆட்டத்திற்கு ரெடி என்று கூற, அதைப் பார்த்த நித்தியாவின் விழிகள் தெறித்து விழும் அளவுக்கு விரிந்தன. அவசரமாகத் தன் பார்வையைத் திருப்பிக் கொள்ள,

அவனோ பொம்மை பறிபட்ட குழந்தையாக அவளைப் பாரிதாபமாகப் பார்த்தான்.

“சா.. சாரிடி... எனக்கு நீ வேணும்... பிளீஸ்...” அவன் சொல்ல, அவனைப் பார்த்து முறைத்தாள்.

இன்னும் அவளுக்கு என்ன நடந்தது என்ற சரியாகத் தெரியவில்லை. ஆனால் உருகிக் குழைந்த உடல், என்ன நடந்திருக்கும் என்பதை அவளுக்கு அப்பட்டமாகச் சொன்னது. அதுவும் பெண்மையின் கசகசப்ப, எதுவரை அவர்கள் சென்றிருக்கிறார்கள் என்பதை அவளுக்குக் கூற, நித்தியாவுக்கு அழுகை வந்தது.

“ஏன்.. ஏன் இப்படி பண்ணினீங்க மாமா?” அவள் அழ, விமலநாதனோ குழப்பமாக அவளைப் பார்த்தான்.

“என்னடி பண்ணினேன்... நாம கணவன் மனைவிதானே. இதில என்ன தப்பிருக்கு. வாடி இன்னொரு வாட்டி பண்ணலாம். பார்டி என்னோட பார்ட்னரை. உன்னை ரொம்பத் தேடுறான்...” முனை சிவந்து நரம்புகள் புடைக்க நின்றிருந்த தன் தோழனை அவளுக்குப் பற்றிக் காட்ட, வெறுப்புடன் அவனைப் பார்த்தாள் நித்தியா.

“நான் சத்தியனை காதலிக்கிறேன்னு உங்களுக்குத் தெரியும். என்னையும் சத்தியனையும் ஒன்னா சேத்து வைக்கிறேன்னு நீங்க சொல்லியிருக்கீங்க. அப்படியிருக்கிறப்ப நீங்களே இப்படி செய்யலாமா?” கேட்கும் போதே விம்மல் வெடித்தது இவளுக்கு. இவனுக்கோ கோபம் வந்தது.

“போதும் நிறுத்து நித்தி... நா உன்னைத் தொட்டப்ப ரசிச்சுட்டுதானே இருந்தே. ரெண்டு மூணு வாட்டி பண்ணிட்டோம். ஆறு முறை உச்சம் கண்டுட்டே. அப்பலாம் நல்லாத்தானே ரசிச்சிட்டு இருந்தே. இப்ப மட்டும் என்ன வந்துச்சு...” என்றவன் உச்சத்தில் அவன் உடலில் அவள் தீட்டிய நக ஓவியங்களை அவளுக்குக் காட்டியவன், தன் தோளில் இருந்த பல் தடத்தைக் காட்டி, “இதைப் பாரு... கடிச்சு வச்சிருக்கே. இதுக்கு மேலயும் என் மேல ஆசை இல்லைன்னு சொல்லாதே...” அவன் கோபமாகச் சொல்ல, என்ன பதில் சொல்றது என்று தெரியாமல் தடுமாறினாள் நித்தியா.

“நா தூங்கிட்டு இருந்தேன் மாமா. என்ன நடந்துச்சுன்னு

எதுவும் புரியல. எல்லாம் கனவில நடந்தது போலதான் இருந்துச்சு.” அவள் சொல்ல அதைக் கேட்டு எரிச்சலானான் விமலநாதன்.

“அதனால என்ன... உன்னைத் தொட எனக்கு உரிமை இல்லையா?”

“இப்படிலாம் பேசாதீங்க மாமா... என்னைத் தொட சத்தியனுக்கு மட்டும்தான் உரிமை இருக்கு...” அவள் சொல்ல ஆத்திரமானான் விமலாதன்.

“போதும்டி நிறுத்து... அவன் யாருடி உனக்கு. ஏதோ காதலிச்சே... தப்பு பண்ணிட்டே. அவனோட சப்டர் க்ளோஸ் ஆயிடுச்சு. இப்ப நான்தனர் உன்னோட தாலி கட்டின புருஷன். எனக்குத் தான்டி உன்மேல அத்தனை உரிமையும் இருக்கு. என்னை விட அவன் உனக்கு உசத்தியா போய்ட்டானா...”

“மாமா... நா சத்தியனை காதலிக்கறேன். உங்களுக்கும் அது தெரியும்... அவனை தவிர இன்னொருத்தனை என்னால ஏத்துக்க முடியாது...”

“அப்புறம் எதுக்குடி என்னோடதை உள்ளே விட சம்மதிச்சே. எதுக்கு உச்சம் அடைஞ்சே. உள்ள நுழைச்சு எடுத்தப்ப உனக்கு நல்லாதானே இருந்துச்சு. ரொம்ப நேரமா உன் மார்பில வாய் வச்சு கடிச்சு உறிஞ்சி இருக்கேன். அப்போலாம் அது நான்னு உனக்குத் தெரியலையா?. அவன் சீற்றமாகக் கேட்க அதற்கு என்ன பதிலைச் சொல்வது என்று தெரியாமல் அழுதாள் அவள்.

இப்ப வரைக்கும் அவங்களுக்குள்ள நடந்ததை நம்பவே முடியல. இது எப்படி ஆச்சுன்னும் புரியல. எல்லாம் ஒரு மாதிரி மந்தமா இருந்தது. விமலநாதன் அவளை அணைத்தது, தழுவியது எல்லாம் கனவில நடக்கிறது போலத்தான் அவளுக்கு இருந்துச்சு. அது நிஜமா நடந்திருக்கு என்கிறதை அவளால ஏத்துக்கவே முடியல. மேலும் அவள் விசும்ப, அதுவரை இருந்த கோபம் சட்டென்று வடிந்து போனது அவனுக்கு.

ஆழ மூச்செடுத்து தன்னை சமப்படுத்தியவனாக அவளை நெருங்க, அவளோ பயத்தோடு இரண்டடி பின்னால் நகர்ந்தாள்.

அதைக் கண்டு முகம் வாடியவன்,

“நிஜமா சாரிடி... நா உன்னைத் தொட்டேன்னா அதுக்கு காரணம், நீ எனக்கு சொந்தமானவ என்கிற உரிமை. புரிஞ்சுகோ. எனக்கு நீ வேணும். ஐ லவ் யு நித்தி... உன்னை என்னால அந்த சத்தியனுக்கு தாரை வார்த்துக் கொடுக்க முடியாது... ஏன்னா... எனக்கு... உன்னை

புடிச்சிருக்கு. உன்னோட அழகு, உன்னோட சிணுங்கல், குழந்தைத் தனம் எல்லாமே எனக்கு புடிச்சிருக்கு. எனக்கு நீ வேணும் நித்தி... உன்னை அந்தளவு சுலபத்தில யாருக்கும் தூக்கி கொடுத்திட முடியாது...” சொன்னவன் மேலும் அவளை நெருங்க, அவளோ அச்சத்தோடு அவனைப் பார்த்தாள்.

“கி... கிட்ட வராதீங்க மாமா... எனக்கு உங்களைப் பாக்க புடிக்கல...” அவள் விசும்ப, உடனே நின்றான் விமலநாதன்.

“ஏன் நித்தி நமக்கு திருமணமாகி எட்டு மாசமாச்சு. இத்தனை மாசத்தில உன்கிட்ட தப்பா நடந்திருக்கேனா? இல்லைல... ஆனா... இப்ப நீ எனக்கு பக்கத்தில இருக்கிறப்ப, தள்ளி இருக்க முடியல. நீ எனக்கு சொந்தமானவ... எனக்கு உன்னைத் தொட அத்தனை உரிமையும் இருக்கு....”

“மாமா... நானும் சத்தியனும் எப்படி இருந்தோம்னு உங்களுக்கு தெரியும். அவன் குழந்தையை வேற நா சுமந்திருக்கேன். நா எப்படி இன்னொருத்தர் கூட.. இது தப்பு மாமா...” அவள் அழ,

“அழாதேடி... இது தெரியாமலா உன்ன கட்டிகிட்டேன். ஒத்துக்கறேன். ஆரம்பத்தில உன்ன அந்த பையன் கூட சேத்து வைக்கணும்னு நினைச்சேன்தான். அப்போ என் மனசில இருந்தது சரிதா. அவளை விட்டு இன்னொருத்திகிட்ட போக முடியும்னு தோணல. ஆனா நாள் போகப் போக சரிதா இருக்கிற இடத்தில இப்ப நீதான்டி இருக்கே. உன்ன அப்படி சும்மாலாம் தூக்கி கொடுத்திட முடியாது...”

“நா... என் காதலையும் என்னால தூக்கி எறிஞ்சிட முடியாது...?” அழுதாள் அவள்.

“முட்டாள் போல பேசாதே நித்தி... நீயும் அந்தப் பையனும் தப்பு செஞ்சீங்கன்னா அந்த தப்புக்கு முழுக் காரணம் உங்க ரெண்டு பேரோட வயசு. இளமை ஆசையை தீர்த்துக்க ஒருத்தரை ஒருத்தர் பயன்படுத்திகிட்டீங்க. அது தப்பாயிடுச்சு. மத்தும்படி இதை காதல்னு சொல்ல முடியாது... அப்படியே அதை காதல்னு வச்சுகிட்டாலும், ஒருத்தனுக்கு இரண்டு வாட்டி காதல் வரக் கூடாதா. எனக்கு வந்திருக்கே நித்திமா... முன்னாடி சரிதாவ காதலிச்சேன். இப்ப உன்னை காதலிக்கிறேன். சரிதாவை காதலிச்சதுக்கு அப்புறமா கட்டிகிட்டேன். உன்ன கல்யாணம் செஞ்சதுக்கு அப்புறமா காதலிக்கிறேன். இந்த எட்டு மாசமா கொஞ்சம் கொஞ்சமா என்னை நெருங்கிட்டே நித்தி. நீ இல்லாம என்னால கஷ்டம்...

புரிஞ்சுக்கோ...” அவன் கெஞ்ச மறுப்பாகத் தலையை அசைத்தாள் நித்தியா.

“இல்ல மாமா... என்னால சத்தியனை மறக்க முடியாது.” அவள் திரும்ப அதிலயே நிற்க, இவனுக்கு கோபம் கட்டுக்கடங்காம வந்தது.

ஆத்திரம் தலைக்கேற,

“போதும் நிறுத்துடி... திருமபத் திரும்ப அதே பல்லவியைப் பாடாத... மொத்தமா மூனு வாட்டி உனக்குள்ள என்னோட விந்த கக்கி இருக்கேன். ஒரு வேளை என்னோட குழந்தைய நீ சுமந்தா என்ன பண்ணுவே. அப்பவும் சத்தியன்தான் வேணும்னு போயிருவேயா...” அவன் கேட்க அதிர்ந்தாள் நித்தியா.

இதை அவள் யோசிக்கலையே. கலக்கத்தோடு விமலநாதனைப் பார்க்க.

“சொல்லுடி.. என்ன செய்வே? இந்த குழந்தையையும் அழிச்சிட்டு அவன் கூடப் போயிருவேயா...?” கேட்க அவளோ விக்கித்து நின்றாள்.

பதில் சொல்லாது நின்றிருந்தவளை முறைத்தவன்,

“உனக்கு அந்த சத்தியன்தான் வேணும்னா நாளைக்கே அவன் கிட்ட போயிடு... என் முகத்தில முழிக்காத...” சீறியவன் கோபமாகக் குளியலறைக்குள் நுழைய, இவளோ கால்கள் நடுங்க, அங்கிருந்த இருக்கையில் வேகமாக அமர்ந்தாள். அழுகை முட்டிக் கொண்டு வந்தது.

“எப்படி நித்தி.. என்னை விட்டு உன் புருஷன் கூட உடம்பை பகிர்ந்துக்க முடிஞ்சுது. அப்போ என்மேல வச்ச காதல் எல்லாம் பொய்தானா?” பரிதாபமாகக் கேட்டவாறு வந்த சத்தியனை நினைத்துக் குன்றிப்போனாள் நித்தியா. அழுகையோ முட்டிக் கொண்டு வந்தது.

இன்னும் அவளால் விமலநாதனின் தொடுகையை ரசித்ததும், உச்சம் கண்டதும், இன்னும் வேண்டும் வேண்டும் என்று உடல் ஆர்பணித்ததையும் அவளால் நம்ப முடியவில்லை. சத்தியனைத் தவிர வேற யாராலும் அவள் பெண்மையை சிலிர்க்க வைக்க முடியாது என்றுதான் நினைத்திருந்தாள். ஆனால், விமலநாதனாலும் முடியும் என்பதைக் கண்டுகொண்டவளுக்கு தன் பலவீனத்தின் மீது கோபம் வந்தது.

கூடவே சத்தியனுக்கு துரோகம் செய்துவிட்டேன் ன்னறு கலங்கியும் போனாள்.

இப்ப கூட கலசங்களின் கூரிய முனையில் நமநமப்பு. இன்னும் கொஞ்ச நேரம் விமலநாதனை அங்க விட்டிருக்கலாமோ? இன்னொரு மனசு ஏங்க திடுக்கிட்டாள் நித்தியா.

சீ சீ.. என்ன சிந்தனை இது? கலங்கி நிற்கையில் உடல் இறுக பாத்ரூமை விட்டு வெளியே வந்தான் விமலநாதன்.

இவளோ அச்சத்தோடு அவனைப் பார்க்க, விமலநாதன் அவளை நிமிர்ந்து கூடப் பார்க்காமல் அறையை விட்டு வெளியேற,

“எ... எங்க போறீங்க மாமா?” தன்னை மறந்து கேட்டாள் நித்தியா.

“நா எங்க போனா உனக்கு என்ன...? உன்னோட வேலைய பாரு...” சொன்னவன் அங்கிருந்து சென்றுவிட, கண்கள் கலங்கி நின்றாள் நித்தியா.

அவளுக்கு எப்படி உணர்வது என்று கூடத் தெரியல. ஒரு பக்கம் அவன் வேணும்னு மனது அடித்துக் கொண்டது. மறு பக்கம் சத்தியனை நினைத்து தப்பு செய்வது போலக் குன்றினாள். இரண்டுக்கும் மத்தியில் திணறிப்போய் நின்றாள் நித்தியா.

(14)

வெளியே வந்த சத்தியனுக்கு ஆத்திரம் கட்டுப்பட மறுத்தது. இது என்னடா வாழ்க்கை என்று தோன்றியது. இதோ இப்ப கூட அவ மேல கோபம் இருந்தாலும், திரும்ப அவளை எடுத்துக்க ஆண்மை ஏங்குவதை எண்ணி எரிச்சல்தான் வந்தது.

அவதான் இவன் வேணாம்னு தெளிவா இருக்காளே. அப்புறம் எதுக்கு திரும்பத் திரும்ப அவ வேணும்னு நினைக்கணும். கோபம் வந்தது அவனுக்கு.

அவனுக்கும் என்னாச்சுன்னு புரியல. திடீர் என்று நாடி நரம்புகள் எல்லாம் உணர்ச்சியில் கொந்தளிக்கத் தொடங்கி விட்டிருந்தது. அவனை அடக்க முடியாமல்தான் நித்தியாவை நெருங்கினான்.

அவளும் அவனுடைய அணைப்பை மறுக்காமல் ஏற்றுக்கொள்ள தயங்காமல் எடுத்துக் கொண்டான். இப்ப என்னன்னா, ரசிக்கிற வரைக்கும் ரசிச்சிட்டு, இப்ப துரோகம், மண்ணாங்கட்டின்னு பைத்தியம் போல உளறுகிறாள்.

இந்த எட்டு மாசத்தில அவனோட மனசு மாறிடுச்சு. ஆனா அவ மனசு இன்னும் மாறாம பழைய சகதியிலயே கெடக்கே. என்ன பண்றது.

சோர்வோடு இன்னொரு அறையில் போய் படுத்துக்கொண்டான் விமலநாதன்.

மறு நாள் அன்னபூரணி நித்தியாவைக் குறுகுறு என்று பார்த்தார். தொய்ந்து களைத்த உடலும், சிவந்த முகமும், அவர் விரும்பியது நடந்துவிட்டது என்பதை சொல்லாமல் சொல்ல, தான் வந்த காரியம் வெற்றியடைந்ததில் பெருத்த நிம்மதி. இனி அவர்களின் வாழ்க்கை சரியாயிடும் என்கிற நம்பிக்கை அவருக்கு வந்துவிட்டிருந்தது.

ஒரு வாரம் கடந்து சென்றது. இந்த ஒரு வாரமும், விமலநாதன் நித்தியாவோடு பேசுவதை அறவே தவிர்த்தான். அன்னபூரணி இருக்கும் போது மட்டும், முகத்தில் எதையும் காட்டமாட்டான். தனியே இருக்கும் போது, அவள் பக்கமே திரும்ப மாட்டான்.

இதில் தாய் எதையாச்சும் கண்டு கொள்வாளோ என்கிற பயத்தில் அதிகாலையே எழுந்து உடற் பயிற்சியை முடித்துக்கொண்டு குளித்து ஏழு மணிக்கெல்லாம் வேலைக்கு ஓடிவிடுவான். நித்தியா எழும்போது அவன் விட்டில் இருக்க மாட்டான். வேலை முடிந்து நேரம் பிந்திதான் வீட்டிற்கே வருவான்.

எதற்காக அவன் அத்தனை தாமதமாக வீட்டிற்கு வருகிறான் என்று நித்தியாவுக்குத் தெரியாமல் இல்லை. அவளைத் தவிர்க்கத்தான் அவன் அப்படிச் செய்கிறான் என்று புரியவே செய்தது. ஆனாலும் அவனுடைய அந்த பாராமுகம் அவளை வதைக்கவே செய்தது.

அவனைத் திருமணம் முடித்த இத்தனை மாதத்தில், இப்படிலாம் அவன் முகம் திருப்பியதில்லை. எப்போது அவளைக் கண்டாலும் கனிவாகப் பார்த்து புன்னகைப்பான். ஏதாவது பேசுவான். விசாரிப்பான். குறைந்தது அவளுடைய படிப்பைப் பற்றியாவது பேசுவான். ஆனால் இந்த ஒரு வாரமும் அவனிடமிருந்து சின்ன விசாரிப்பும் வராது போக, எதையோ பெரிதாக இழந்தது போலத் தவித்தாள் நித்தியா.

அன்றும் அப்படித்தான். விமலநாதன் அதிகாலை எழுந்து குளித்து விட்டு ஆடை மாற்றும் பொது, எழுந்துவிட்டிருந்தாள் நித்தியா.

அவன் வேலைக்குத் தயாராவதைக் கண்டதும், வியந்தவள்,

“மாமா... இன்னிக்கு ஞாயித்துக் கிழமை...” என்றாள் அவனுக்கு அறிவுறுத்தும் வகையில். இவனோ பதில் சொல்லாமல், பையை எடுத்துக்கொண்டு கிழம்ப, படுக்கையை விட்டு எழுந்தவள் அவனுக்குக் குறுக்காக வந்து நின்றாள்.

“மாமா... ஏன் மாமா இப்படி பண்றீங்க. இந்த ஒரு வாரமா நீங்க என் கூட சரியா பேசவே இல்லை தெரியுமா...” குரல் கம்ம அவள் சொல்ல, அவனோ அவளை அலட்சியமாகப் பார்த்தான்.

“உனக்கு அதுதானே வேணும்... அப்புறம் எதுக்கு கம்பிளைன்ட் பண்றே...” அவன் எரிச்சலுடன் கேட்க, விமலநாதனை முறைத்தாள் நித்தியா.

“நா எப்ப அப்படிச் சொன்னேன்... பிளீஸ் மாமா... இப்படி பண்ணாதீங்க. ரொம்ப கஷ்டமா இருக்கு...” அவள் அழுகையுடன் சொல்ல அவளை வெறுமையாகப் பார்த்தான் விமலநாதன்.

“போதும் உன் நடிப்பெல்லாம்... நிறுத்திடு. அதுதான்

அன்னிக்கு தெளிவா என்கிட்ட சொல்லிட்டியே நீ இன்னும் சத்தியனைத்தான் நினைச்சிட்டு இருக்கிறதா. அப்புறம் உன்கிட்ட பேசி எனக்கு என்ன ஆகப்போகுது. இன்னும் கொஞ்ச மாசம்தான். வெய்ட் பண்ணு. உனக்கும் ஒரு கும்பிடு, உன் பக்கமும் ஒரு கும்பிடுன்னு உன்னை அந்த சத்தியன் கிட்டயே அனுப்பி வச்சிடுறேன். அதுக்கு அப்புறமா நீ அந்த சத்தியன் கூட சேர்ந்து வாழு...” வெறுப்போடு சொன்னவன், அவள் விக்கித்து நிற்பதையும் பொருட்படுத்தாமல் வெளியேறிச் செல்ல அழுதவாறு நின்றாள் நித்தியா.

அவளால் விமலநாதனின் வெறுப்பையும் பாராமுகத்தையும் தாங்கிக்கொள்ளவே முடியவில்லை. கூடவே அவனை எப்படிச் சமாதானம் செய்வது என்றும் தெரியவில்லை.

அன்று காலையே அன்னபூரணி தொடங்கி விட்டார்.

“ஏம்மா உன் புருஷனுக்க என்னாச்சு? இப்பலாம் அவன் வீட்லயே இருக்க மாட்டேங்கிறான்?” அவர் யோசனையுடன் புருவங்களைச் சுருக்க, இவளுக்கு என்ன சொல்வது என்று தெரியவில்லை.

“அது வந்து... அத்தை... அங்க ஆபிசில நிறைய வேலை பென்டிங்கல இருக்குன்னு சொன்னாரு. அதுதான்... காலையே எந்திரிச்சதும் போயிட்டார்...” சொல்ல, பெருமூச்சு விட்டார் அன்னபூரணி.

“இன்னிக்கமா வேலை பாக்கணும். என்னவோ... முன்னாடிலாம் நான் வந்தேன்னா என்ன சுத்திச் சுத்தியே திரிவான். இப்ப என்னன்னா வேலைக்கு போயிட்டான். குடும்பத்தில இருக்கிறவங்களை பாத்துக்காம அப்படி ஓடிப் பணம் சம்பாரிச்சு என்னத்த பாக்க போறான்?” கோபம் வந்தது அன்னபூரணிக்கு.

அன்று இரவு விமலநாதன் வந்த பிறகு அவனை ஒரு பிடி பிடித்து விட்டார்.

“ஏன்டா... கட்டின பொண்டாட்டிய விட உனக்கு வேலை அம்பிட்டு முக்கியமா போயிடுச்சா. இங்க நான் வந்து ஒரு வாரமாச்சு. இத்தனை நாள்ல அவ கூட நீ நேரம் செலவழிச்சு நா பாக்கவே இல்லை. இன்னிக்கு கூட வீட்டில இருக்காம, வேலைன்னு போனா என்ன அர்த்தம்?” அவர் கோபமாகக் கேட்க, சலிப்போடு தாயைப் பார்த்தான் விமலநாதன்.

“அம்மா... வருட இறுதி. நிறைய கணக்கு வழக்கு பாக்கணும்மா... இங்கனயே கிடந்தா அதை யாரு பாக்கிறது?” சலித்தவன்,

“சரி... நா குளிச்சுட்டு வர்ரேன். சாப்பாடு எடுத்து வை...” அவன் சென்றுவிட மகனை முறைத்தார் அன்னபூரணி.

“டேய் உனக்கு எதுக்கு ஒருத்திய கட்டிவச்சேன். இந்த வேலைய செய்யத்தானே. அவகிட்ட கேக்காம என் கிட்ட கேக்கிறே...” அதுக்கும் அன்னபூரணி முறைத்துக் கொள்ள, உதவிக்கு வந்தாள் நித்தியா.

“எதுக்கு அத்த அவரை திட்டுறீங்க. பாவம் களைச்சு விழுந்து வந்திருக்கார். தள்ளுங்க நா எடுத்து வைக்கிறேன்...” அவள் சொல்ல சாப்பாட்டை எடுத்து வைக்கும்போதே விமலநாதன் வந்துவிட்டிருந்தான்.

தாய் பக்கத்திலேயே இருந்ததால் அவனால் எதுவும் பேச முடியவில்லை. சாப்பாட்டு மேசையில் வந்தமர, தயக்கத்தோடு நித்தியா உணவு பரிமாற, எதுவும் பேசாமல் சாப்பிடத் தொடங்கியவனின் கண்கள், அவளுடைய மார்பில் ஊஞ்சலாடிய மஞ்சள் கயிற்றில் கட்டிய தாலியில் நிலைத்தது. அதைக் கண்டவன் ஏளனத்துன் சிரித்தான்.

அவன் கட்டிய தாலி மட்டும் கழுத்தில தொங்குது. ஆனா அவனை சுமக்க கசக்குது. விரக்தியாக நினைத்தவன், சாப்பிட்டு முடித்து எழுந்ததும்,

“ஏன்பா... உன்கிட்ட கொஞ்சம் பேசணும்...” என்றவாறு வந்தார் அன்னபூரணம்.

“சொல்லுமா...”

‘நாளைக்கு நீ வேலைக்கு போகாதே...”

“ஏம்மா?”

“அது ஒன்னுமில்லப்பா.... உங்க ரெண்டு பேருக்கும் கல்யாணமாகி எட்டு மாசம் ஆயிடுச்சு. இன்னும் தாலி பிரிச்சு கோர்க்கல. நா ஊருக்கு போறதுக்குள்ள, உனக்கு தாலி பிரிச்சு கோக்கணும்னு நினைக்கிறேன். நாளைக்கு நல்ல நாளு. அதனால நாளைக்கே அதை செஞ்சிடலாம்னு நினைக்கிறேன்...”

“அதுக்கு எதுக்குமா நானு... நீங்களே பாத்தக்கங்க. எனக்கு வேலை இருக்கு...” அவன் முடிக்கவில்லை கோபமாக எகிறிக் கொண்டு வந்தார் அன்னபூரணி.

“டேய்... என்னோட வாயக் கெளறாத. அப்புறம் எதையாச்சும் பேசிடப் போறேன்... நா வந்து ரெண்டு வாரமாகுது. இன்னும் பொண்டாட்டிகிட்ட அணுசரணையா நடக்கிறத நா பாக்கல. காலை எந்திரிச்சதும் வேலைக்கு போறே, சாமத்தில வீட்டுக்கு வர்ரே... கேட்டா வேலைங்கிற.... உன்னோட மனசில என்னதான் நினைச்சிட்டிருக்கே...” கோபமாகக் கேட்டவர்,

“இதோ பாருடா... நாளைக்கு நீ எங்கயும் போகல. வீட்டிலதான் இருக்கே. பக்கத்தில இருக்கிற சுமங்கலி பொண்ணுங்களா வரச் சொல்லி இருக்கேன். வந்திடுவாங்க. வாய மூடிட்டு சொல்றத செய்... அவ்வளவுதான்...” உறுதியாகச் சொல்ல, அதற்கு மேல் தாயோடு எதிர்த்துப் பேச அவனால் முடிந்திருக்கவில்லை.

மறுநாள் தாலி பிரித்துக் கோர்க்கும் சடங்க சிறப்பாக நடந்தேற, சுமங்கலிப்பெண் கொடுத்த பொன் தாலியை நித்தியாவின் கழுத்தில் போட்டுவிட்டா விமலநாதன். ஆனாலும் அவனுக்கு முகம் இறுகியிருந்தது. நித்தியாவோ, அமைதியாக அவன் கட்டிய தாலியை வாங்கிக் கொண்டாள்.

“இந்தாங்க தம்பி, தாலில இந்த குங்குமத்தை வச்சு விடுங்க. அப்படியே நெத்திலயும், வகிட்டிலயும் வையுங்க. சொல்ல, மறுக்காமல் வைத்துவிட்டான் விமலநாதன்.

எல்லாம் நிறைவாக முடிந்து அனைவரும் விடைபெற்றுச் செல்ல, அன்னபூரணி தன் ஆடைகளை எடுத்து பெட்டியில் அடுக்கத் தொடங்கினார். அதைக் கண்டு கலங்கிப்போனாள் நித்தியா.

அவளுக்க இருக்கும் ஒரே ஆதரவு அன்னபூரணிதான். அவரும் கிளம்பிவிட்டால் அவள் கூட பேச யாரும் இருக்க மாட்டார்களே. விமலநாதன் வேறு இன்னும் கோபம் குறையாமல் உர் என்று இருக்கிறான். இதில் அவள் யார் கூட பேசுவாள். காலேஜ் இருந்தாலாவது நேரம் போகும். அதுக்கும் வழியில்லையே.

தயக்கமாக அன்னபூரணியின் அறைக்கு வந்தாள் நித்தியா.

“ஏன் அத்தை ஊருக்கு கட்டாயம் போகணுமா?” கேட்க புன்னகைத்தார் அன்னபூரணி.

“இங்கனயே தங்கிக்க முடியாதேமா... ஊருல இருக்கிற தோட்டம் துறவ யாரு பாத்துக்கறது. அது மட்டுமில்ல, இங்க எனக்கு ஒத்துக்காதுடா. ரெண்டு வாரம் தாக்கு பிடிச்சதே அதிகம்..” என்றவர், நிமிர்ந்து தன் மருமகளைப் பார்த்தார் அன்னபூரணி. என்ன நினைத்தாரோ, அவளுடைய கரங்களைப் பற்றி அழைத்து வந்து படுக்கையில் அமர்த்தியவர்,

“நித்திமா... வாழ்க்கைல நாம நினைக்கிற எதுவும் நடந்திடுறது இல்ல. ஆனா கிடைக்கிற வாழ்க்கைய கெட்டியா புடிச்சிட்டு அதன் போக்கில வாழ்றதுதான் புத்திசாலித்தனம். கிடைக்ககாததுக்கு எண்ணி ஏங்கிறத விட, கிடைச்சதை நினைச்சு வாழ்றதுதான் நம்ம

வாழ்க்கைக்கு சுகம் கொடுக்கும். நான் சொல்றது உனக்கு புரியுதில்ல...” என்றவர், தன் மருமகளை இறுக அணைத்து விடுவித்தார்.

“உன் கிட்ட நா கேக்கிறது ஒன்னே ஒன்னுதான். நா கண்ண மூடுறதுக்குள்ள, பேரனையோ பேத்தியையோ நா பாத்துடணும். அதுக்கு நீதான் பாத்து பக்குவமா நடந்துக்கணும். ஆம்பளைங்கன்னா அப்படி இப்படித்தான் இருப்பாங்க. ஆனா அவங்களை முந்தில முடிஞ்சு வச்சிட்டா, காலை சுத்திட்டே கிடப்பானுங்க...” என்றவர் தன் மருமகளை உற்றுப் பார்த்தார்.

“நா சொல்றது உனக்கு புரியுதில்ல. அவன் என்னதான் கோபமா இருந்தாலும் விட்டுக் கொடுத்து போ... அப்பதான் அவனும் விட்டுக் கொடுத்து போவான்... ரெண்டு பேரும் முறைச்சுட்டிருந்தா, அதுக்கு விடிவே இருக்காது...” அவர் சொல்ல எதற்கு இப்போது இதை சொல்கிறார் என்கிற குழப்பத்தோடு அவரைப் பார்த்தாள் நித்தியா. அதைக் கண்டு சிரித்தவர்,

“இப்ப எதுக்கு இதெல்லாம் சொல்றேன்னு நினைக்கிறியா... உங்க ரெண்டு பேருக்கும் இடையில இன்னும் எதுவும் சரியாகலைன்னு எனக்குத் தெரியும்...”

“அத்தை...”

“மத்தவங்களை ஏமாத்தலாம். என்னை ஏமாத்த முடியாதுமா... என்னோட அனுபவத்தையும் ஏமாத்த முடியாது. நா வந்த அன்னிக்கே உங்க ரெண்டு பேருக்கு இடையில எதுவும் சரியாகலைன்னு கண்டு புடிச்சிட்டேன். அதுதான் உங்களை சேத்து வைக்க ஏதேதோ பிலான்லாம் போட்டேன். அப்புறம் அன்னிக்கு நீ குடிச்ச பால்ல உணர்ச்சியைத் தூண்டுற மூலிகை கலந்து கொடுத்தேன்...” அவர் சொல்ல அதிர்ந்தாள் நித்தியா.

அதுதான் அன்னிக்கு அவன் தொட்டப்ப இவளால் மறுக்க முடியலையா. அம்மாடி. என்ன வேலைலாம் பாத்திருக்காங்க? கோபம் வர அத்தைக் காரியைப் பார்த்தாள் நித்தியா. ஆனால் அது எதையும் கருத்தில் எடுக்கவில்லை அன்னபூரணி.

இங்க பாருமா... நீ ஒருத்தன லவ் பண்ணினே. அது சரி வரல. இப்ப உனக்குன்னு ஒரு வாழ்க்கை அமைஞ்சிடுச்சு. இனி இதுதான் உன் வாழ்க்கை. இந்த வாழ்க்கைய வாழ்ந்துகிட்டு நடந்து முடிச்ச வாழ்க்கையப்பத்தி யோசிக்கிறது ரொம்ப தப்பு. அப்படி இருந்தா நீ மட்டுமில்ல, உன்ன சுத்தி இருக்கிறவங்களும் பாதிக்கப் படுவாங்க. சத்தியன் என்கிறது இறந்த காலம். இனி

நினைச்சாலும் அந்த காலத்துக்கு உன்னால போக முடியாது. உன்னோட புருஷன்தான் உன்னோட நிகழ்காலம், எதிர்காலம் எல்லாமே. உன்கூட கடைசி வரை வரப்போறது அவன்தான்.”

“ஏன் அத்தை ஒருத்தனை மனசார காதலிச்சுட்டு அவனை மறந்திடுறது அம்பிட்டு சுலபமா?” அழுதாள் நித்தியா.

“முதல் காதல் எப்பவுமே மறக்க முடியாத ஒன்னுன்னு எனக்குத் தெரியும். அனா அதையே புடிச்சு தொங்கிட்டிருந்தா, வாழ்க்கை நரகமாயிரும். காதலிச்சவனத்தான் கல்யாணம் கட்டிக்கணும்னா, இன்னிக்கு உலகத்தில யாருமே கல்யாணம் கட்டி வாழ மாட்டாங்க. உன்னோட விதி, அந்த பையன் உனக்கு இல்லைன்னு முடிவாயிடுச்சு. அதுக்கு கருவியா உன்னோட அப்பனும் ஆத்தாவும் இருந்திருக்காங்க. அவ்வளவுதான்மா. புரிஞ்சுகோ. வாழ்க்கைங்கிறது நிரந்தரமில்ல. யாருக்கு எந்த நேரம் என்ன நடக்கும்னு தெரியாது. கிடைக்கிற வாழ்க்கைய சந்தோஷமா அனுபவிச்சிட்டுப் போறதுதான் புத்திசாலித்தனம்....” நிறைய அறிவுறை சொன்னவர், மறு நாள் கிளம்பி ஊருக்கு சென்றுவிட்டிருந்தார்.

அன்னபூரணி இருக்கும் வரைக்கும் வீடு ஓரளவு நன்றாக இருந்தது அவர் சென்றதும் பழையது போல ஒரு வெறுமை அந்த வீட்டை நிறைத்துக் கொண்டது. அவர் சென்ற அன்றே. நித்தியா மீண்டும் தன் அறைக்கு உடமைகளை மாற்றிக் கொண்டாள். விமலநாதனும் தடுக்கவில்லை.

(15)

மீண்டும் நாட்கள் அதன் போக்கில் பயணிக்கத் தொடங்கியது. பழையபடி நித்தியா காலேஜ் செல்லத் தொடங்கினாள். முன்பு விமலநாதன்தான் அழைத்துச் சென்று காலேஜில் விட்டு வருவான். இப்போது ஒரு டிரைவரை நியமித்திருந்தான்.

அது நித்தியாவுக்கு பெரும் கவலைதான். அவனோடு போகும் போது ரொம்ப மகிழ்ச்சியாக இருக்கும். அவள் எதைப் பார்த்து ஆசைப்பட்டாலும் உடனே வாங்கிக் கொடுத்துவிடுவான். இப்போது எதையும் ஆசைப்பட முடியவில்லை.

அவன்தான் இவளைக் கண்டாலே முகத்தைத் திருப்பிக் கொண்டு போகிறானே. இதில் என்னத்தை பேசுறது.

விமலநாதனுக்கும் நித்தியாவைப் பக்கத்தில் வைத்துக்கொண்டு எதையும் தெளிவாக யோசிக்க முடியவில்லை. எல்லாமே வெறுப்பாக இருந்தது. வீட்டிற்கு வரவே பிடிக்கவில்லை.

அவளைப் பார்த்தால், அவனையும் மீறி தீனி கேட்கும் ஆண்மைக்கு பதில் சொல்ல முடியவில்லை.

அனுபவித்த இன்பத்தை திரும்பத் திரும்ப அனுபவிக்க ஆசை வந்தது. அதைத் தணிக்க குளிர் நீரில் குளித்தும் பார்த்தாச்சு. தியாணமும் செய்தாச்சு. ஆனாலும் மனசு கட்டுக்குள் வர மறுத்தது.

அதனால் இப்போதெல்லாம் நீண்ட தூரம் நடந்துவிட்டு வருகிறான். அப்போதுதான் உடல் களைத்துப் போகிறது. கொஞ்சம் தூங்கவும் முடிகிறது.

அதே போல நித்தியாவுக்குள்ளும் இப்போதெல்லாம் நிறைய மாற்றம். விமலநாதனைக் கண்டாலே இதயம் படபடக்கிறது. அவள் அனுமதியையும் மீறிப் பெண்மை அவனை ரசிக்கிறது. இப்போதெல்லாம் அவனைப் பார்த்தாலே அவளுடைய அடி வயிற்றில் ஒரு வித சிலிர்ப்பு. சட்டென்று இரட்டைக் கனிகளும் இறுகி வலிக்க, பெண்மைக்குள் ஓருவித அவஸ்தை.

ஒரு வேளை மஞ்சள் கயிற்றின் மாஜிக்கா இல்லைன்னா அன்னிக்கு அவன் தொட்டதா என்ன காரணம்னு

தெரியல. அவன் வேண்டும் என்று கெஞ்சுகிறது ஆசை கொண்ட பெண்மை.

ஒரு முறை சுவை கண்டால் அதையே தேடி மனசு ஓடுவது போல, அன்று விமலநாதனின் கைங்கரியத்தால், உச்சத்தைத் தொட்டிருந்தவளுக்கு திரும்ப அதை அனுபவிக்கும் ஆசை வந்தது. அவளும் பாவம் என்ன செய்வாள். இளமைக்குரிய தீனி போட்டுத்தானே ஆகணும்.

அன்று அதிகாலை எழுந்ததும், நித்தியா விமலநாதன் எழுந்து விட்டானா என்று முன்னறையைப் பார்த்தாள். அவனைக் காணோம்.

இந்த இரண்டு மாதமாக, அவளையும் மீறி அவனைத் தேடுகிறாள். எப்போதும் அதிகாலையில் எழுந்ததும், வாக் போயிட்டு வந்து செய்தி வாசிப்பான். பிறகு குளித்துவிட்டு வேலைக்குப் போய்விடுவான். இதுதான் அவனுடைய ருட்டின். அது தெரிந்தே இவளும் காலையில் எழுந்து அவனைக் கடைக் கண்ணால் பார்ப்பான். இவன்தான் கவனிக்க மாட்டான்.

ஆனால் இன்று அவனை முன்னறையில் காணோம்.

என்னாச்சு இந்த மாமாவுக்கு. பொதுவாக நேரத்திற்கு அவர் வந்துவிடுவாரே? ஒரு வேளை மழை பெய்வதால், வேலைக்குப் போகவில்லையோ? யோசனையோடு காப்பி குடித்து முடித்ததும், காலை உணவைச் செய்யச் சமையலறைக்குள் நுழைந்தாள்.

அன்னிக்கு வேலையாட்கள் யாரும் வரவில்லை. இங்கே அதுதான் பிரச்சனை. தொடர்ந்து மழை என்றால், யாரும் வரமாட்டார்கள். எச்சரிக்கைதான் காரணம். கடந்த ரெண்டு நாட்களாக அடை மழை. அந்த ரெண்டு நாட்களும் அவள்தான் சமைக்கிறாள். நல்லவேளை எதுவும் சொல்லாமல் சாப்பிட்டுவிட்டு வேலைக்குப் போய்விடுகிறான் விமலநாதன்.

அதுவே அவளுக்கு சந்தோஷம்தான்.

காலை சமையலை முடித்துக் கொண்டு, விமலநாதனை அழைத்துவருவதற்காக அவனுடைய அறைக் கதவைத் தட்ட, உள்ளிருந்து எந்த சத்தமும் வரவில்லை.

“மாமா... சாப்பாடு ரெடி..” அவன் அழைத்தால் மட்டும் அவன் பதில் சொல்லப் போகிறானா என்ன? திரும்பவும் தட்டிப் பார்த்தவள், மெதுவாகக் கதவைத் திறக்க, அங்க விமலநாதன் படுக்கையில் உறங்கிக் கொண்டிருந்தான்.

“மாமா...” இவள் மெதுவாக அழைக்க, அவனோ

அசையாது படுத்துக் கிடந்தான். ஏனோ நெஞ்சு படபடத்தது அவளுக்கு.

“மாமா... உங்களைத்தான்...” இப்போது அவனிடத்தில் சிறு அசைவு.

“மாமா... சாப்பாடு ரெடி...” அவள் சொல்ல,

“ப்ச்... மேசையில எடுத்து வச்சிட்டு போ... அப்புறமா சாப்பிடுறேன்...” முனங்கலாக வந்தது பதில். பதறிப்போனாள் நித்தியா.

ஏன் இத்தனை பலவீனமாகப் பேசுகிறான். உடல் சரியில்லையோ? நெஞ்சம் துடிக்க, அவனை நெருங்கியவள்,

“மாமா..” அழைத்தவாறு அவன் முகத்தைப் பார்த்தாள். விழிகள் மூடியிருந்தன. பார்க்கும் போதே ஏதோ சரியில்லை என்று தெரிந்தது,

சந்தேகத்துடன் அவனுடைய நெற்றியைத் தொட்டுப் பார்க்க காய்ச்சல் அனலாகக் கொதித்தது.

“ஐயோ... மாமா... காய்ச்சலா இருக்கே?” பதறிக் கேட்டவள், அவனை நிமிர்ந்து படுக்க வைக்க முயல, அவளுக்கு சிரமம் கொடுக்காமல் திரும்பிப் படுத்தான் விமலநாதன். அவன் கழுத்தில் கையை வைத்தவளுக்கு அதன் சூட்டில் கலங்கினாள்.

“மாமா... உடம்பு சுடுது... வாங்க டாக்டர் கிட்ட போகலாம்...” சொல்ல, அவளுடைய கரத்தைத் தட்டிவிட்டவன்,

“ப்ச்... எதுக்கு என்ன எழுப்பறே. நான் தூங்கணும்...” முணங்கியவன் திரும்பவும் விழிகளை மூட,

“மாமா... இங்க பாருங்க... எந்திரிங்க மாமா... வாங்க டாக்டர் கிட்ட போகலாம்...” அவள் அழைக்க, மறுத்தான் அவன்.

“இந்த மழையில எந்த டாக்டர் இருக்கப் போறாரு. விடு. ரெண்டு நாளையில சரியாயிரும்...” அவன் சொல்ல, இவளால் சரின்னு விட்டுட்டு இருக்க முடியல. ஓடிப்போய் தன் செல்லை எடுத்தவள் அன்னபூரணியை அழைத்தாள்.

ஊரிலும் நல்ல மழை.

“அத்தை.. உங்க மகனுக்கு உடம்புக்கு முடியல.. காய்ச்சல் காயுது. நான் என்ன செய்யட்டும்?” கலங்கியவாறு கேட்க, அங்கே அன்னபூரணியும் கொஞ்சம் பதறினார்.

“அவனுக்கு சில வேளைங்களில் காலநிலை ஒத்துக்காது. அதனாலதான் காய்ச்சல் வந்திருக்கு போல. இங்க பாரு... நா சொல்ற கசாயத்த செஞ்சு கொடு...” காய்ச்சல் சரியாயிரும்.” அன்னபூரணி சொல்ல, உடனே அன்னபூரணி சொன்னது போல கசாயம் வைத்து, ஒரு தட்டில் இட்டலியும் எடுத்துவைத்து, விமலநாதனின் அறைக்கு எடுத்துச் சென்றாள்.

அவனோ போர்வைக்குள் நடுங்கியவாறு இருந்தான்.

“மாமா... எந்திரிங்க மாமா... இந்த கசாயத்த குடிங்க...” அவள் எழுப்ப, அவனோ மறுத்தான்.

“வேணா... என்னை கொஞ்சம் தூங்க விடு...”

“பிளீஸ் மாமா... ரெண்டு வாய் சாப்பிட்டு படுங்க... எந்திரிங்க மாமா...” சொன்னவள் கையிலிருந்த கசாயத்தையும், சாப்பாட்டுத் தட்டையும் அங்கிருந்த மேசையில் வைத்துவிட்டு, அவன் மீது கிடந்த போர்வையை இழுத்து எழுக்க, லுங்கி அவிழ்ந்து கிடந்தது. கொஞ்சம் இறங்கினாலும் போதும். அவனுடைய ஆண்மை வெளியே தெரியும்.

அவசரமாக லுங்கியை இழுத்து சரியாக்கியவள், அவளுடைய தோளைப் பற்றி எழுப்பி அமர வைக்க முயன்றாள். அவனோ மறுத்தான்.

“என்னடி பண்றே... என்னை நிம்மதியா தூங்க விடு. கனவிலதான் தொல்லை செய்றேன்னா, நிஜத்திலயும் வந்து எரிச்சல் மூட்டாதே. தள்ளிப் போ...” முனங்கியவன் போர்வையைக் கரங்களால் தேட, அவன் பக்கத்தில் அமர்ந்தவள், அவனுடைய கரங்களைப் பற்றி எழுப்ப, வேண்டா வெறுப்பாக எழுந்தமர்ந்தான் விமலநாதன்.

“இந்தாங்க இதை குடிங்க...”

“வேணா நித்தியா... பிளீஸ் என்னை சும்மா விடேன்...”

“மாமா காய்ச்சல் சரியாகணுமா வேணாமா... ஒரு வாய் குடிங்க மாமா...” அவனிடம் நீட்ட அவனோ படுக்கையில் சரியப் போனான். உடனே அவனைத் தன் தோள் மீது சாய்த்தவள், ரெண்டு மாத்திரையை அவன் வாயில் போட்டு கசாயத்தையும் வலுக்கட்டாயமாகப் புகட்ட, வேண்டா வெறுப்பாகக் குடித்து முடித்தான் விமலநாதன். கையோடு இட்டலியைப் பிய்த்து சாம்பாரில் தோய்த்து அவன் வாயில் வைத்து,

“சாப்பிடுங்க...”

“பிடிக்கல நித்தி..”

“ஒரு வாய் சாப்பிடுங்க. அப்பதான் காய்ச்சல் சரியாகும்...”

“வேணா நித்தி...” அவன் முடிக்கவில்லை, ஒரு விள்ளலை அவன் வாயில் திணித்து விட்டிருந்தாள் நித்தியா. வேண்டா வெறுப்பாக சாப்பிட்டான் விமலதான். எப்படியோ கெஞ்சி ஒரு இட்டலியை அவனுக்கு ஊட்டிவிட்டவள், அவனுடைய வாயை முந்தானையால் துடைத்துவிட்டு, எழப் போக, சட்டென்று அவளுடைய மடியில் சரிந்துவிட்டான் விமலநாதன்.

“மாமா...” அவள் திணற,

“பிளீஸ்... கொஞ்ச நேரம் உன் மடில படுத்துக்கறேன் நித்தி...” முனங்கியவன் உடலைக் குறுக்கிக் கொண்டு படுத்துக் கொள்ள, அவளால் அவனைத் தள்ளிவிட முடியவில்லை.

தவிர, நீண்ட நாட்களுக்குப் பிறகு அவன் உரிமையாய் அவன் மடி சாய, அவளாலும் மறுக்க முடியவில்லை.

அதனால் மெதுவாக அவன் முடியை வருடிக் கொடுக்க,

“குளிருது நித்தி...” என்றான் விமலநாதன் நடுக்கத்தோடு. உடனே போர்வையை எடுத்து அவனைப் போர்த்தி விட அவனோ திரும்பி அவள் வயிற்றில் முகம் புதைத்து விழிகளை மூடினான்.

அவனுடைய அந்த செயலில் சிலிர்த்தது நித்தியாவுக்கு. அதுவும் அவனுடைய சூடான மூச்சுக்காற்று வயிற்றில் பட்டுத் தெறிக்க உடல் குழைந்தது.

தன்னை மறந்து அவன் தலை முடியை அவள் வருடிக் கொடுக்க, அப்படியே உறங்கிப் போனான் விமலநாதன்.

(16)

நீண்ட நேரத்திற்குப் பிறகு உடல் வியர்த்துக் கொட்ட விழிகளைத் திறந்தான் விமலநாதன். தலையிடி குறைந்திருந்தது. உடல் சோர்வும் மட்டுப்பட்டிருந்தது.

எழுந்து கழிவறை போக நினைத்தவனாக விழிகளைத் திறந்தவனுக்கு கண்ணுக்கு விருந்தாகத் தெரிந்தது வெண் வயிறும் அதன் மத்தியில் அழகான தொப்புளும்.

குழம்பிப் போனான் விமலநாதன். மெதுவாக நிமிர்ந்து பார்க்க, பளிச் என்று தெரிந்தன ஜாக்கட்டிற்குள் மறைக்கப்பட்டிருந்த இரட்டைக் கனிகள். அப்போதுதான் தான் நித்தியாவின் மடியில் படுத்த உறங்கிக் கொண்டிருப்பது அவனுக்குப் புரிந்தது.

அதிர்ந்து போனான் விமலநாதன். இவ எப்ப வந்தா? நா எப்படி இவ மடில படுத்தேன்? குழப்பத்தோடு அவள் முகத்தைப் பார்க்க அவளோ, கட்டில் சட்டத்தில் தலையை வைத்த நல்ல உறக்கத்தில் இருந்தாள்.

எத்தனை நேரமாக இவ மடியில படுத்திருக்கோம்? யோசித்தவாறே மெதுவாக எழுந்தான். அவன் விழித்தது கூடத் தெரியாமல் உறங்கிக் கொண்டிருந்தாள் நித்தியா. எழுந்தவன் கழிவரை போய்விட்டு வர, இன்னும் அப்படியேதான் அமர்ந்திருந்தாள்.

அவன் நேரத்தைப் பார்க்க, மதியம் ஒரு மணி. இத்தனை நேரமாவா தூங்கிட்டிருந்தோம். அதுவும் அவ மடியில.

மெதுவாக அவளை நெருங்கியவன், அவளுடைய தோள்களில் கரத்தைப் பதித்து,

“நித்தி... போ... போய் உன் அறையில படுத்துக்கோ...” அவன் சொல்ல, மெதுவாக விழிகளைத் திறந்தாள் நித்தியா.

“என்ன மாமா... எந்திரிச்சிட்டீங்களா.. இப்போ காய்ச்சல் எப்படி இருக்கு?” கேட்டவள் எழுந்து அவன் நெற்றியைத் தொட்டுப் பார்க்க இவனோ அவளுடைய கரத்தைத் தட்டி விட்டான்.

“ப்ச்... எனக்கு ஒன்னுமில்ல. லேசா காய்ச்சல்... அவ்வளவுதான்...” அவன் சொல்ல அவனை முறைத்தாள் நித்தியா.

“லோசான காய்ச்சலா... நா தொட்டப்ப அப்படி சுட்டுச்சு தெரியுமா. அப்புறம் அத்தையை கூப்பிட்டு அவங்க சொன்ன மாதிரி காசயம் செஞ்சு கொடுத்தேன்...” சொன்னவளை கோபமாகப் பார்த்தாந் விமலநாதன்.

“நீ எதுக்கு இதெல்லாம் செய்றே...? நீ காலேஜ் போகல?” அவன் கேட்க, உதடுகளைப் பிதுக்கினாள் நித்தியா.

“உங்களுக்கு முடியாம இருக்கிறப்ப நா எப்படி காலேஜ் போறது. அப்புறம் மழை கொட்டுறதால காலேஜுக்கு லீவ் விட்டிருக்காங்க.” சொன்னவள் எழுந்து மேசையில் இருந்த வெற்றுப் பாத்திரங்களை எடுத்துதவாறு,

“உங்களுக்கு சாப்பிட என்ன வேணும்? ஈசியா டைஜஸ்ட் பண்து போல கஞ்சி வச்சு கோடுக்கவா?” கேட்டவளிடம் மறுப்பாகத் தலையை அசைத்தான் விமலநாதன்.

“நீ ஒன்னும் எனக்கு எதுவும் செய்ய வேணாம். உன் வேலையை மட்டும் பாரு...” முறைப்போடு சென்றவன் அறையை விட்டு வெளியேற, முணுக் என்று அழுகை எட்டிப் பார்த்தது நித்தியாவுக்கு. ஏனோ அவனுடைய அந்த முறைப்பை அவளால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

“ஏன் மாமா இப்படி கோபமா பேசுறீங்க... உங்க நன்மைக்காகத்தானே கேக்கறேன்” கேட்டவளின் கண்களில் கண்ணீர் கோர்த்தது.

“ப்ச்... இப்ப எதுக்கு கண் கலங்கிறே... உனக்கு நான் யாரு... யாரோ ஒருத்தன்தானே... பிறகு எதுக்கு எனக்காக நீ கஷ்டப்படணும் என்னை பாத்துக்க எனக்குத் தெரியும்... நீ போ.. பொய் படி...” அவன் சொல்ல,

“சாரி மாமா... அன்னிக்கு ஏதோ ஒரு உணர்ச்சி வேகத்தில அப்படி பேசிட்டேன். வேணும்னா எனக்கு ரெண்டு அறை வேணா கொடுத்துடுங்க. வாங்கிக்கறேன். ஆனா இப்படி தள்ளி வைக்காதீங்க மாமா. கஷ்டமா இருக்கு... பிளீஸ்...” அவள் அழுகையுடன் கெஞ்ச, விமலநாதனால் அதற்கு மேல் இறுக்கமாக இருக்க முடியவில்லை. அதுவும் அவளுடைய கண்ணீரைக் கண்டவனுக்குத் தன் கோபத்தை இழுத்துப் பிடித்திருக்க முடியவில்லை.

“இப்ப எதுக்கு கண்ண கசக்கிறே நித்தியா. நீ அழுதா எனக்கு கஷ்டமா இருக்கும்னு உனக்குத் தெரியும்ல... தயவு செஞ்சு கண்ண தொடச்சுக்கோ..” அவன் சொல்ல,

“அப்ப என்னை மன்னிச்சிட்டேன்னு சொல்லுங்க மாமா...” என்றாள் விசும்பலாக.

“உன்னை மன்னிக்க நான் யாரு நித்தியா. யாரோ

ஒருத்தன் தானே... சரி... போய் வேலைய பாரு..” என்றவன் நேராக சமையலறைக்குள் நுழைய. இவளோ கண்களைத் துடைத்தவாறு அவன் பின்னால் ஓடினாள்.

“மாமா... என்ன மன்னிச்சிட்டீங்கன்னா, உங்களுக்கு கஞ்சி வச்சு கொடுக்கறேன். சாப்பிடுங்க...”

“ப்ச்... எனக்காக நீ சிரமப்பட வேணாம். இப்ப நா ஓகேவாதான் இருக்கேன். நானே பாத்துக்கறேன்...”

“அப்போ நீங்க என்னை மன்னிக்கல அப்படித்தானே...” அவள் திரும்ப கண்ணைக் கசக்க, ஐயோ என்றானது இவனுக்கு.

“சரி... சரி... திரும்ப அழாதே. கஞ்சி வச்சு கொடு. குடிக்கிறேன்...” சொல்ல மலர்ந்தாள் நித்தியா.

“இதோ மாமா...” பரபரவென்று அவனுக்கு கஞ்சி வைப்பதற்காக ஒரு பாத்திரத்தில் தண்ணீரை ஊற்றி அடுப்பில் வைக்க, இவன் முன்னறைக்கு வந்து கோபாவில் அமர்ந்தான்.

நித்தியாவோ அவனுக்கு கஞ்சி காச்சும் பரபரப்பில் பம்பரமாகச் சுற்றினாள். ரெண்டு மாசத்துக்கு பிறகு அவன் பேசியது ரொம்ப மகிழ்ச்சியாக இருந்தது.

தண்ணீர் கொதித்ததும் அரிசியைக் களைந்து போடும் போது, அவசரத்தில் அவளுடைய கை அடுப்பில் தண்ணீர் கொதித்துக் கொண்டிருந்த பாத்திரத்தைத் தட்டிவிட, கொதிக்கும் தண்ணீர் அப்படியே அவள் மீது கொட்டிவிட, துடித்துப் போனாள் நித்தியா.

“மாமா...” என்கிற அலறலில் அவள் வயிற்றைப் பற்றப் பதறித் துடித்து ஓடிவந்தான் விமலநாதன்.

“நித்தி என்னாச்சு...”

“ஷ்... ஆ... சுடதண்ணி கொட்டிடுச்சு...” அழுகையில் அவள் சொல்ல, அவளை அதிர்வோடு பார்த்தான். சேலை வயிற்றுப் பகுதியோடு ஒட்டியிருந்தது. பார்த்ததுமே தெரிந்தது, வயிற்றில் சுடு நீர் கொட்டியிருக்கிறத என்று.

நிலைமை புரிந்து மறு கணம் அவளைத் தன் கரங்களில் தூக்கிக் கொண்டான் விமலநாதன்.

“எல்லாத்துக்கும் உனக்கு அவசரம்தான். நான்தான் கஞ்சி வச்சு குடிக்கிறேன்னு சொன்னேல்ல... கேட்டாதானே...” கோபமாகச் சொன்னவன் அவளை ஏந்தி வந்து சோபாவில் கிடத்தியவன் ஓடிப்போய் ஃபிரிஜ்ஜைத் திறந்து ஐஸ் கியூபை எடுத்துக் கொண்டு வந்தான்.

“ஒன்னுமில்லடி... சரியாயிரும்...” வலியில் துடித்தவளைப்

பார்த்து பதட்டத்தோடு சொன்னவன், கரத்திலிருந்த ஐஸ் கியூப் டிரேயை டீ டேபிலில் வைத்து விட்டு அவளுடைய சேலையைக் களைந்து எறிந்து விட்டு, இடையில் இறுக்கிக் கிடந்த பாவாடை நாடாவை அவிழ்த்துப் பாவாடையைக் கீழே இறக்கியவன், அவளுடய வயிற்றைப் பார்த்தான்.

வலது பக்க வயிற்றுப் பகுதி சுடநீர் பட்டதால் சிவந்து போயிருந்தது.

“ஒன்னுமில்ல... ஒன்னும் இல்லடி... சரியாயிடும்... அழாதே..” சொன்னவன், ஐஸ் கியூபை அள்ளி எடுத்து காயம் பட்ட இடத்தில் வைக்க, சில்லிட்டது அவளுக்கு.

கூடவே எரிந்தது.

“ஷ்... குளிருது மாமா. கூடவே எரியுது...”

“சரியாயிரும்.. பெரிசா காயம் படல நித்திமா. ஐஸ் கட்டி வச்சதும் சரியாயிரும்...” அவன் சொல்ல உதடுகளைக் கடித்து வலித்த இடத்தில் அவன் ஐஸ் கட்டிகளை வைப்பதை ஏற்றவாறு விழிகளை மூடிக் கிடந்தாள் நித்தியா.

நல்ல வேளை, அரிசி களைந்து போட்டதால் கொதி நீரின் சூடு ஓரளவு மட்டுப்பட்டிருந்தது. இல்லை என்றால் கொப்பளங்கள் வந்திருக்கும்.

ஆனாலும் அவளுடைய பால் வண்ண மேனியில் சுடுதண்ணீர் பட்ட இடம் சிவந்து போயிருந்தது.

“இவனோ ஐஸ் கியூபால் சிவந்து போன இடங்களை மென்மையாக வருடி விட, எரிச்சலில் விழிகள் மூடி அவன் செய்யும் சேவையை ஏற்றவாறு கிடந்தாள் நித்தியா.

கொஞ்சம் கொஞ்சமாக வயிறு, தொப்புள் என்று பூசி வந்தவவனின் கரம் மெல்ல மெல்லக் கிழிறங்கி பான்டியின் ஆரம்பப் பகுதியை வந்தடைந்தது. அதுவரை அவளுக்கு வலிக்குமே என்று பதட்டத்தோடு சேவகம் செய்து கொண்டு வந்த விமலநாதனுக்கு வாயில் எச்சில் ஊறியது. கரமோ தயங்கியது.

அப்போதுதான் அவளை முழுதாகப் பார்த்தான் விமலநாதன்.

இரட்டைக் கலசங்களையும் மறைக்க முடியாது மூச்சுத் திணறிக் கொண்டிருந்தது பிங்க் நிற ஜாக்கட். அதற்குள் வெள்ளை நிற பிரா அணிந்திருந்தாள். அதுவும் லேஸ் வைத்தது. அதைக் கண்டவனுக்கு தான் செய்துகொண்டிருந்த காரியம் மொத்தமாக மறந்து

போனது.

அன்று இரவில்தான் அவளுடைய கலசங்களைக் கண்டான். சுவைத்தான் இன்று பட்டப் பகலில் அவளுடைய கலசங்களின் அழகையும் அதன் கனத்தையும் கண்டவனுக்கு அத்தனை சுலபத்தில் அங்கிருந்து விழிகளை விலக்க முடியவில்லை. அதுவும் குளிரைத் தேகம் உணர்ந்து கொண்டதாலோ என்னவோ முலைக் காம்புகள் இரண்டும் விடைத்து ஜாக்கட்டைக் கிழிப்பது போலத் துருத்திக் கொண்டு இருந்தது,

அதைக் கண்டதும் இனிப்பு பண்டத்தைக் கண்டதும் வாய் ஊறுவது போல இவன் வாயும் ஊறியது.

அதே நேரம் ஐஸ் கியூபோ இப்போது கரைந்து போக அவனுடைய வெற்றுக் கரம்தான் அவளுடைய வயிற்றை வருடிக் கொண்டிருந்தது.

“ம்... இப்ப கொஞ்சம் சுகமா இருக்கு மாமா...” என்றாள் அவனுடைய கரத்தின் வருடலை உணர்ந்தவாறு.

“வேற எங்காச்சும் காயம் பட்டிருக்கா நித்திமா...” கிசுகிசுப்பாகக் கேட்டவனின் பார்வை இன்னும் செழித்த கலசங்களை விட்டு விலகுவதாக இல்லை.

“இல்ல மாமா...” அவள் சொல்ல, அவளுடைய முகத்தைப் பார்த்தான் சத்தியன்.

அவளுடைய விழிகள் மூடியிருந்தன. ஆனால் இவனுடைய ஆண்மையோ விழித்துக் கொண்டது.

அது பாட்டுக்கு நீட்டி நிமிர்ந்து அக்காடா எனக்கு விடுதலை என்பது போல அவன் லுங்கிக்குள் கூடாரமிட்டிருக்க, அவனால் அதற்கு மேல் தன்னை அடக்க முடிந்திருக்கவில்லை.

அழகிய கோவில் சிற்மாக அவன் கண் முன்னால் மனைவி படுத்துக் கிடக்க, ஒரு ஆண் மகனால் எப்படித்தான் அமைதி காக்க முடியும்.

அன்று அவள் மீது ஏற்பட்ட மனக் கசப்பை மொத்தமாக மறந்தவனாக, மீண்டும் ஐஸ் கியூபை எடுத்து அவளுடைய வயிற்றில் பூசியவாறு கொஞ்சம் கொஞ்சமாக கீழே கொண்டு வந்தவன், சட்டென்று பான்டியின் மிது பெண் பூவில் வைக்க, துடித்தாள் நித்தியா.

“மாமா... என்ன பண்றீங்க...” அவள் திணற,

“ஷ்... வயித்தில பட்ட சுடு தண்ணி அங்க பட்டிருக்காதா?” என்றான் கிசுகிசுப்பாக.

“அது... அங்கெல்லாம்...” அவள் தடுமாற,

“என்ஜாய் பண்ணு நித்திமா...” முனங்கியவன் பெண்மையின் பூ மொட்டு மறைந்திருக்கும் இடத்தில் ஐஸ் கியூபால் வட்டமடிக்க புதிய அந்த சுகத்தில் திக்கு முக்காடினாள் அவள்.

இப்போது அவளை நோக்கி குனிந்தவன், அவனுக்கு வெளிச்சமிட்டு மலர்ந்து கிடந்த கனிகளில் இரண்டிலும் சின்னச் சின்னதாய் முத்தம் வைக்க உணர்ச்சிப் பெருக்கில் சிக்கித் தவித்தாள் நித்தியா.

இப்போது அவனுடைய கரம் பான்டிக்குள் நுழைந்து, ஐஸ் கட்டியை நந்தவனத் தோட்டத்தில் நுழைக்கத் துடித்தாள் அவள்.

“நல்லா இருக்கா நித்தி...” என்றான்.

“ம்...” என்றாள் அவள் திணறலாக.

“குளுறுதா...”

“ஷ்... ம்..” அவள் முணங்க, அவன் செயில் விடைத்த மகரந்த மொட்டைச் சுற்றி ஐஸ்கட்டியால் வட்டமடிக்க நடுங்கிப் போனாள் நித்தியா.

பிங்க் நிற ஜாக்கட்டின் முனையோ வட்டமாக ஈரமாகியிருக்க, அதன் ஊடே பெண்மையின் தித்திக்கும் முனை அப்பட்டமாக வெளியே தெரிய, அதைக் கண்டவன் பித்தாகிப் போனான். அவளோ அவனுடைய அந்த புதிய அணுகு முறையில் சிலிர்த்துப் போய் கிறங்கிக் கிடந்தாள்.

“ரொம்ப குளுறுதாடி..” அவன் கேட்க, உதடுகளைக் கடித்தவள்,

“ம் என்றாள் முணங்கலாக.

“விறைச்சிடுச்சா...”

“ம்...” அவள் சொல்ல, ஈராகிவிட்ட கலச முனையைப் பற்றி அழுத்திக் கொடுக்க,

“ஷ்... என்றாள் நித்தியா.

“நா... இதுங்களை பாக்கணும் நித்தியா...” சொன்னவன் அவளுடைய அனுமதியையும் வேண்டாமல் ஹுக்குகள் தெறித்து விழ ஜாக்கட்டைப் பிய்த்து எடுக்க, வெண்ணிற லேஸ் வைத்த பிரா, அவள் கலசங்களைத் தாங்கி நிற்க முடியாமல், குலுங்கி அவன் கண்களுக்கு விருந்தாகப் பித்தாகிப் போனான் விமலாதன்.

அதற்கு மேல் அவனைக் கட்டுப்படத்தவே முடியவில்லை.

அவளுடைய கலசங்களை பிராவோடு சேர்த்து அள்ளி எடுத்துக் கசக்கியவன், அவளைத் தமக்குள் அடக்க முடியாது திணறிக் கிடந்த பிராவை ஒரு இழுவையில் கீழே இறக்கத் துள்ளிக்கொண்டு வெளியே வந்து விழுந்தன இரட்டை முயல் குட்டிகள்.

அதைக் கண்டவளுக்கு தன் விழிகளை விலக்கவே முடியவில்லை.

அன்று இருட்டில் கண்ட அழகை இப்போது பட்டப் பகலில் காண அவனால் உணர்ச்சிகள் காட்டாற்று வெள்ளமாகப் பாய்ந்தது. அவளுக்குள் நுழையாமலே வெடித்து விடுவோமோ என்கிற அச்சம் வேறு அவனுக்கு வந்தது.

ஆனாலும் தன்னை அடக்கியவனாக ஆசையோடு அவள் கனிகளை நோக்கிக் குனிந்தவன், இரண்டு முலைக் காம்புகளிலும் முத்தமிட்டான். அவற்றுக்கு மத்தியில் முகத்தைப் புதைத்து அப்படியும் இப்படியும் அசைந்தான். உதட்டால் அந்தக் கலசத்தின் நீள அகலத்தை அளந்தான். கொஞ்சமாகக் கடித்தான். நாவால் வட்டமடித்தான். சுவைத்தான். கடித்து மென்றான். பின், ஒரு கரத்தால், ஒற்றைக் கனியைப் பற்றி நசுக்கி, அதன் முனையை உதட்டால் கவ்வி எடுத்துப் பலமாக உறிஞ்ச. மறு கரமோ ஐஸ் கட்டி ஒன்றை எடுத்து பான்டிக்குள் நுழைத்துச் சங்குப் பூவில் வைத்தான்.

கீழே பயங்கரக் குளிரும், மேலே அவன் வாயின் வெம்மையும் அவளைத் திக்கு முக்காட வைக்க, துடித்தாள் நித்தியா.

“மாமா... ஷ்... முடியல மாமா...” அவள் தவிப்பைப் பார்த்தவாறு, வாயால் முலைக் காம்பை இழுத்து எடுத்து விட்டான். அதுவோ ரப்பர் பந்தாகத் துள்ளி பழைய இடம் சென்று சேர்ந்தது.

மற்றைய முலைக் காம்பையும் அப்படியே அவன் வாய்க்குள் எடுத்துப் பலாமாகச் சப்பி எடுத்து விடுவிக்க, இப்போது சத்தியனின் கரத்தில் இருந்த ஐஸ் கட்டி கரைந்து போய் வெற்றுக் கனியைக் கரம் அளைந்துகொண்டிருக்க அவளுடைய பெண்மையோ முழுதாக ஈரமாக்கியிருந்தது.

இப்பொது கரத்தை வெளியே எடுத்தவன், அவளைப் பார்த்து,

“இன்னும் பூசவா...” அவன் கேட்க, எப்படி மறுப்பு சொல்வாள்.

“ம்...” அவள் உணர்ச்சிப் பெருக்கில் முணங்கினாள்.

இப்போது இரு கரத்திலும் ஐஸ் கட்டிகளை எடுத்தவன், இரண்டு முலைக் காம்புகளிலும் வைத்து உருட்ட,

“ஷ்... ஆ... ம்...” தன்னை மறந்து முணங்கினாள் அவள்.

அவள் சுக வேதனையில் திணறுவதை ஆசையோடு பார்த்தவன்,

“நித்தி...”

“ம்..”

“நீ எனக்கு வேணும். எடுத்துக்கவா?” ஏக்கமாகக் கேட்டான்.

“எ.. எடுத்துக்கோங்க மாமா...”

“நிஜமா...”

‘ம்...”

“அப்புறம் இடையில என்ன நிறுத்தி மாட்டியே...”

“இ... இல்ல மாமா...”

“நீ... நிறுத்தினாலும் என்னால ஸ்டாப் பண்ண முடியாது நித்தி...”

“நிறுத்த மாட்டேன் மாமா... எடுத்துக் கோங்க...” அவள் அனுமதி கொடுக்க, குளிரிலும், இன்ப உணர்ச்சியிலும் விறைத்துப் போயிருந்த முலைக் காம்பைக் கண்டு வெறி கொண்டவனாக,

“செம அழகுடி இதுங்க...” சொன்னவன், விரல்களால் அக் காம்பை வருடி, தடவி அள்ளி எடுத்து நசிக்க, துடித்தாள் நித்தியா.

“மாமா...” அவள் தவிக்க,

“என்னடி...”

“வா.. வாய் வைங்க மாமா.. முடியல...” அவள் சொல்லும் போதே, அவனுடைய கையிலிருந்த ஐஸ் கட்டி கரைந்து போயிருந்தது.

ஈரத்தில் பளபளத்த கனி மொட்டை ரசித்துப் பார்த்தவன், ஆசையோடு தன் வாயைத் திறந்து நாக்கால் தொட்டு உதடுகளை மூடி, அதை அள்ளி உறிஞ்சி எடுக்க, அதுவரை குளிரில் சிலிர்த்துப் போன பெண் கனித் தோட்டம், அவனுடைய வாய் கொடுத்த சூட்டில், பாவ விமோஷனம் பெற்றது போல அவன் வாய்க்குள் துடித்து அடங்கியது.

“ம்... மாமா... கடிங்க மாமா... நல்லா சப்புங்க... ஷ்... அப்படித்தான்...” அவள் துடிக்க, பசுவில் கன்று பால்

